




**தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா**

நவீன உலகில் கிருஷ்ண உணர்வை விரிவுரை செய்தவர்களுள் தலைமையானவர்.

ஸ்தாபக - ஆசாரியர் : ''இஸ்கான்''.







**ஸ்ரீல பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மகாராஜா**

தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதாவின் ஆன்மீக குரு

நவீன காலத்தின் முதன்மையான சமயப் புலவர்.



**ஸ்ரீல கௌரகிசோர தாஸ பாபாஜி மகாராஜா**


ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமியின் ஆன்மீக குரு

ஸ்ரீல பக்தி வினோத தாகுரரின் அந்தரங்க மாணவர்.




**ஸ்ரீல பக்திவினோத தாகுரர்**

அகில உலகையும் கிருஷ்ண உணர்வில் மூழ்கடிக்கும்
திட்டத்திற்கு வழிகாட்டியவர்.



**ஸ்ரீ பஞ்ச - தத்வம்**

பகவான் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர்,
முக்கிய சகாக்களால் சூழப்பட்டுள்ள, ஸ்ரீமத் பாகவதத்தின் சீரிய போதகர்.




**படம் ஒன்று :** குருவிக் கூட்டை மட்டும் சுத்த செய்வதால் குருவியை திருப்திப் படுத்த முடியாது. அதுபோலவே, உறங்கும் ஆத்மாவின் தேவையை அறியாமல், உடலையும் மனதையும் திருப்திப்படுத்துவதால், மகிழ்ச்சியடைய முடியாது. (பக்கம் 123-124)



**படம் இரண்டு :** ஜட உலகைப் படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில் களுக்காக, முறையே பிரம்மா (ரஜோ குணமூர்த்தி), விஷ்ணு (சத்வ குணமூர்த்தி), சிவன் (தமோ குணமூர்த்தி) ஆகிய மும்மூர்த்திகளின் உருவங்களை பரம புருஷர் ஏற்கிறார். (பக்கம் 151-152)




**படம் மூன்று :** பரமபுருஷரான ஸ்ரீ கிருஷ்ணரும், அவரது அடுத்த விரிவங்கமான பலராமரும், பகவானின் பத்தொன்பதாம், இருபதாம் அவதாரங்களாக பூமியில் அவதரித்தனர். (பக்கம் 200)





**படம் நான்கு :** கலியுகத்தின் அறியாமை இருளில் மூழ்கியுள்ளவர்களுக்கு சூரியனைப் போன்ற ஸ்ரீமத் பாகவதம் ஞான ஒளியை ஊட்டக் கூடியதாகும். (பக்கம் 234)



**படம் ஐந்து :** முக்தியடைந்த திரிலோக சஞ்சாரியான நாரத முனிவர், பகவானின் புகழ் பாடிக் கொண்டும், இழிவடைந்த ஆத்மாக்களைக் காப்பாற்றிக் கொண்டும், ஜட, ஆன்மீக உலகங்களில் சஞ்சரிக்கிறார். (பக்கம் 378 - 379)



**படம் ஆறு :** துவாரகைக்குப் புறப்படும் பொழுது, குந்தி தேவியின் இதயபூர்வமான பிரார்த்தனைகளைக் கேட்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இரக்கத்துடன் இலேசாக புன்னகை செய்தார். (பக்கம் 521)



**படம் ஏழு :** குருட்சேத்திரப் போர் முடிவுறும் வேளையில், குருவம்சத்தின் வீர பிதாமகரான பீஷ்மதேவர், உயிருக்கு ஆபத்தான காயங்களுடன் அம்புப்படுக்கையில் கிடந்தார். அப்பொழுது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உட்பட சிறந்த புருஷர்கள் அனைவரும் பீஷ்மருக்கு அஞ்சலி செலுத்த அங்கு கூடினர். (பக்கம் 531 - 545)



**படம் எட்டு :** குருட்சேத்திர யுத்தத்திற்குப் பிறகு, யுதிஷ்டிர மகாராஜனால் செய்யப்பட்ட பிரம்மாண்டமான ராஜசூய யாகத்தில், பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அனைவரது உள்ளங்களையும் கவர்ந்தார். (பக்கம் 598)



**படம் ஒன்பது :** திருதராஷ்டிர மகாராஜன் யோக சக்தியால் தானே உண்டாக்கிய தீய்க்கு தன் உடலை இரையாக்கினார். பிறகு பதிவிரதையான அவரது மனைவி காந்தாரியும், சிந்தை கலையாமல் தீயினுள் பிரவேசித்தாள். (பக்கம் 856)



**படம் பத்து :** துவாரகைக்குச் சென்ற அர்ஜுனரின் வரவுக்காகக் காத்திருந்த யுதிஷ்டிரரும் பீமசேனரும் பல கெட்ட சகுனங்களைக் கண்டனர் . இது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மறைவையும், கலியுகத்தின் பிறப்பையும் உணர்த்தியது. (பக்கம் 862-877)



**படம் பதினொன்று :** குருட்சேத்திரப் போர்க்களத்தில், கௌரவர்களின் வெல்ல முடியாத படைபலம் பெரும் சமுத்திரம் போல் காணப்பட்டது. ஆனால் ஸ்ரீ கிருஷ்ணரின் நட்பால் தேரில் அமர்ந்திருந்த அர்ஜீனனால் அதைக் கடக்க முடிந்தது. (பக்கம் 917-918)





தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா
ஸ்தாபக - ஆசாரியர்:
அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்



ஹரித்துவாரிலுள்ள கங்கைக் கரையில் தன் ஜட உடலை விட்ட அஜாமிளன், பகவானின் சகவாசத்திற்கேற்ற தன் மூல ஆன்மிக உடலை திரும்பப் பெற்றார். பிறகு அவர் பகவான் விஷ்ணுவின் தூதர்களுடன் ஒரு தங்க விமானத்திலேறி பகவானின் உலகிற்குப் பயணமானார். (பக்கம் 128-129)



கடலுக்கடியில் தவமியற்றி வெளியே வந்த பத்து பிரசேதர்களும் பூமியில் மரங்கள் அடந்திருப்பதைக் கண்டு கடுங் கோபமடைந்து அவற்றை எரித்துச் சாம்பலாக்கிவிட, தங்கள் வாய்களிலிருந்து நெருப்பையும், காற்றையும் உண்டாக்கினர். பிறகு சந்திரதேவனான சோமன் பிரசேதர்களின் கோபத்தைத் தணிக்க அவர்கள் முன் தோன்றினார். (பக்கம் 187-190)



பரமபுருஷரின் உன்னத குணங்கள் ஜீவராசிகளைக் கவர்ந்திருப்பதால் அவர் கிருஷ்ணர் எனப்படுகிறார். குறிப்பாக எங்கு அவர் தமது தோழர்களான இடைச்சிறுவர்களுடனும், மற்ற அந்தரங்க சகாக்களுடனும் லீலைகள் புரிகிறாரோ, அந்த பிருந்தாவனத்தில் தமது பரிபூரண கவர்ச்சியுடைய அம்சத்தை அவர் வெளிப்படுத்துகிறார். (பக்கம் 227)



தட்சனின் ஸ்தோத்திரங்களால் மிகவும் திருப்தியடைந்த பகவான் ஸ்ரீ ஹரி நாரதராலும், நந்தராலும், மற்றெல்லா முக்கிய தேவர்களாலும் சூழ்ந்தபடி, தமது கருட வாகனத்தில் தட்சன் முன் தோன்றினார். (பக்கம் 233)



தேவர்களால் தங்கள் புரோகிதராக நியமிக்கப்பட்ட விஸ்வரூபர், அசுரர்களை வெல்லும் சக்தியை அளித்த நாராயண - கவசத்தைப் பற்றி தேவேந்திரனுக்கு உபதேசித்தார். (பக்கம் 369)



வேள்வித் தீயின் தென் பகுதியிலிருந்து ஒரு பயங்கர உருவம் வெளிப்பட்டது. அவன் யுக முடிவில் சிருஷ்டி முழுவதையும் அழித்துவிடும் காலனைப்போல் காணப்பட்டான். (பக்கம் 410)




தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே இந்திரன் தனது வஜ்ராயுதத்தினால் விருத்ராசுரனின் தலையைத் துண்டித்தார். அப்பொழுது விருத்ராசுரனின் உடலிலிருந்து வெளிப்பட்ட உயிர்பொறி ஆன்மிக உலகிற்கு திரும்பிச் சென்றது. (பக்கம் 538-540)



அதிக கோபமடைந்த இந்திரன் தனது சக்திவாய்ந்த கதைகளுள் ஒன்றை விருத்ராசுரன் மேல் வீசினார். ஆனால் அதைத் தன் இடது கையில் எளிதில் பிடித்துக் கொண்ட பலசாலியான விருத்ராசுரன் அதைக் கொண்டே கோபத்துடன் இந்திரனுடைய யானையின் தலையில் அடித்தான். அந்த அடி பேரொலியை உண்டாக்கியது. அந்த கதையினால் தாக்கப்பட்ட ஐராவத யானை இடிவிழுந்த மலைபோல் பதினான்கு கஜ தூரம் பின்நோக்கித் தள்ளப்பட்டது. அது தன் வாயிலிருந்து இரத்தம் கக்கியபடி பெரும் வேதனைக்குள்ளாகி, இந்திரனோடு தரையில் விழுந்தது. (பக்கம் 492-493)



பிராமணனான விருத்ராசுரனைக் கொன்ற காரணத்தால் இந்திரனுடைய பாவ விளைவின் சொரூபம், ஒரு சண்டாளப் பெண்ணின் உருவில் இந்திரனைப் பின் தொடர்ந்து சென்று அவரைத் துன்புறுத்தியது. (பக்கம் 552-553)



மாமுனிவரான நாரதர் தமது யோக சக்தியால் இறந்துவிட்ட சித்ரகேதுவின் மகனை மீண்டும் உயிர்ப்பித்தார். பிறகு அந்த மகன் உன்னத அறிவை எடுத்துரைத்து, அந்த அரசனுக்கு ஞானோபதேசம் செய்தான். (பக்கம் 625)



தன் வழிபாட்டுக்குரிய பகவான் முன் பேரன்பையும், பக்தியையும் உணர்ந்த சித்ரகேது, தனது பணிவான வணக்கங்களை அவருக்குச் சமர்ப்பித்தார். (பக்கம் 666-667)



மகா விஷ்ணு காரணக்கடலில் பள்ளி கொண்டிருக்கும்பொழுது அவரது சுவாசத்தின் மூலம் கோடிக்கணக்கான பிரபஞ்சங்கள் வெளியே வந்து, மீண்டும் உள்ளே செல்கின்றன. (பக்கம் 677)



ஒருசமயம் பகவான் விஷ்ணுவால் கொடுக்கப்பட்ட மிகப் பிரகாசமான ஒரு விமானத்திலேறி சித்ரகேது மகாராஜன் விண்வெளியில் பிரயாணம் செய்தபோது, முனிவர்களின் சபையில் சிவபெருமான் பார்வதியைத் தன் மடியில் அமர்த்தி, அவளை அணைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். (பக்கம் 723)


# ஸ்ரீமத்
# பாகவதம்

## பத்தாம் காண்டம்
## பாகம் மூன்று



தெய்வத்திரு
அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா
ஸ்தாபக ஆசாரியர்: அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்





**படம் ஒன்று:** ஸ்ரீமதி ராதாராணி ஸ்ரீ கிருஷ்ணருடனான தன் முந்திய சகவாசத்தைப் பற்றி தியானித்து, பரவசத்தினால் பித்துப் பிடித்தவளானாள். அப்பொழுது தன் முன் ஒரு தேனீயைக் கண்டு, அதைத் தன் அன்பிற்குரியவரால் அனுப்பப்பட்ட தூதனாகக் கற்பனை செய்து கொண்டாள். (பக்கம் 76)




படம் இரண்டு: கிருஷ்ணரின் பிரிவாலுண்டான அன்புணர்ச்சிகளில் மூழ்கிய ஸ்ரீமதி ராதாராணி, பிருந்தாவனப் புதர்களில் அவருடன் தான் பகிர்ந்து கொண்ட பல அந்தரங்கமான நேரங்களை நினைவு கூர்ந்தாள் (பக்கம் 77-94)




**படம் மூன்று:** ஸ்ரீ கிருஷ்ணருடனான நெருக்கத்தினால் ஆவலும், வெட்கமும் கொண்ட திரிவக்ரையை முன்னுக்கழைத்த பகவான், அவளது வளைகள் பூட்டிய கைகளைப் பற்றி தன் படுக்கை மேல் அவளை இழுந்தார். *(பக்கம் 132-133)*




**படம் நான்கு:** ஸ்ரீ கிருஷ்ணர் குகையின் ஒரு மூலையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வேளையில், முசுகுந்தன் எழுந்து தன் கோபப் பார்வையைக் காலயவனன் மீது செலுத்த, அவனது உடல் நொடிப் பொழுதில் எரிந்து சாம்பலாயிற்று. *(பக்கம் 216)*



**படம் ஐந்து:** ஜராசந்தன் பிரவர்ஷண மலைக்குத் தீ வைத்ததும், கிருஷ்ணரும் பலராமரும் தொன்னூறு மைல்கள் உயரமுள்ள அந்த மலையுச்சியிலிருந்து பூமியில் குதித்தனர். *(பக்கம் 259)*



**படம் ஆறு:** ''எப்பொழுதும் என்னில் திருப்தியடைந்தவனாக உள்ள நான், மனைவிகள், மக்கள், செல்வம் ஆகியவற்றைப் பொருட்படுத்துவதில்லை. நீ ஏன் பொருத்தமான வேறொரு கணவனைத் தேடிக் கொள்ளக் கூடாது?'' என்ற ஸ்ரீ கிருஷ்ணரின் பரிகாச வார்த்தைகளைக் கேட்டு ராணி ருக்மிணி மிகவும் வருத்தமடைந்தாள். *(பக்கம் 507)*




**படம் ஏழு:** ருக்மிணி பகவானின் மாயச்சக்தி போல் வசீகரமாகக் காணப்பட்டார். கூடியிருந்த அரசர்கள் அவளது அழகை உற்று நோக்க, அவளது உதடுகளில் இனிய புன்னகை தவழ்ந்தது. அவளது மல்லிகை மொட்டு போன்ற பற்கள் அவளது சிவந்த உதடுகளின் பிரகாசத்தைப் பிரதிபலித்தன. அவளது அசாதாரண அழகில் மதிமயங்கிய அரசர்கள் தங்கள் ஆயுதங்களைக் கை நழுவவிட்டு யானை, தேர், குதிரை போன்ற தங்கள் வாகனங்களிலிருந்து மயங்கி தரையில் விழுந்தனர். ருக்மிணி எந்த நொடியிலும் கிருஷ்ணரின் வரவை எதிர்பார்த்து மெல்ல முன்னோக்கி நடந்தாள். திடீரென்று அவள் பகவானைக் கண்டாள். பிறகு எதிரிகள் பார்த்துக் கொண்டிருக்க பகவான் அந்த இளவரசியைத் தம் தேரில் ஏற்றிக் கொண்டார். (பக்கம் 311)



**படம் எட்டு:** *சியமந்தக மணியை உகரசேன மன்னருக்குக் கொடுக்கும்படி கிருஷ்ணரால் கேட்கப்பட்ட பொழுது, அதைக் கொடுக்க மறுத்த குற்றத்தைப் போக்கிக் கொள்ள எண்ணி சத்ராஜித் அந்த மணியுடன், பெண் இரத்தினமான தன் மகள் சத்தியபாமாவையும் பகவானுக்குக் கொடுத்தார்.* (பக்கம் 398)



**படம் ஒன்பது:** ஒருசமயம் சிவபெருமான் தாண்டவ நாட்டியம் ஆடிக் கொண்டிருந்த பொழுது, பாணாசுரன் தனது ஆயிரம் கைகளால் வாத்தியக் கருவிகளை வாசித்து அவரை மகிழ்வித்தான். (பக்கம் 574)



**படம் பத்து:** கோசல நாட்டை ஆள்பவரும், சிறந்த தர்மிஷ்டருமான நக்னஜித்திற்கு நாக்னஜிதீ என்ற ஓரழகிய மகள் இருந்தாள். கூரிய கொம்புகளுடைய ஏழு முரட்டுக் காளைகளை அடக்குபவரால் அவளைக் கைப்பிடிக்க முடியும். பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் நாக்னஜிதீயை மணக்க விரும்பி கோசல நாட்டுக்குச் சென்று மன்னர் நக்னஜித்திடம் அவரது மகளை யாசித்தார். பகவானும் நிபந்தனையைக் கேட்டபின் தமது கச்சையை கட்டிக் கொண்டு தம்மை ஏழு உருவங்களாக விரிவடையச் செய்து எளிதில் அக்காளைகளை அடக்கி அவற்றின் கர்வத்தையும், பலத்தையும் உடைத்தார். பிறகு அக்காளைகளைக் கயிற்றால் கட்டி ஒரு பாலகன் மரப்பொம்மைகளை விளையாட்டாக இழுப்பது போல் பகவான் அவற்றை இழுத்துச் சென்றார்.


*(பக்கம் 447, 453-454)*




**படம் பதினொன்று:** பகவான் பலராமர் தமது கலப்பையால் யமுனை நதியை இழுக்கத் துவங்கியதும், யமுனை நதியின் அதிதேவதையான காளிந்தி அச்சத்துடன் பகவான் முன் வந்து கருணை காட்டும்படி வேண்டினாள். *(பக்கம் 675-676)*



**படம் பன்னிரண்டு:** பகவான் பலராமர் கோபத்துடன் தமது கலப்பையின் கூரிய முனையால் அஸ்தினாபுரத்தைத் தோண்டி, முழு நகரையும் கங்கைக்குள் தள்ளிவிட எண்ணி அதை இழுக்கத் துவங்கினார். (பக்கம் 750)




**படம் பதின்மூன்று:** நாரத முனிவர் தமது அரண்மனைக்குள் பிரவேசித்ததைக் கண்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், உடனே எழுந்து நாரதரின் பாதங்களில் சிரம் தாழ்த்தி வணங்கியபின் அம்முனிவரைத் தம் சொந்த இருக்கையில் அமரச் செய்தார். (பக்கம் 768)



படம் ஒன்று : இந்திரன் வெட்கமுற்று பிருது மன்னரின் திருவடித் தாமரைகளைத் தொடுவதற்காக அவர் முன் வீழ்ந்தான். ஆனால் பிருதுவோ அவனை மார்புறத் தழுவிக் கொண்டு தன் வேள்விக்குரிய குதிரையை அவன் திருடியதனால் ஏற்பட்ட கோபத்தை விட்டுவிட்டார். (பக்கம் 25)



படம் இரண்டு : பிருது மன்னர் நன்கு அலங்கரிக்கப்பட்ட தன் நகருக்குள் வந்தபோது மிகவும் கவர்ச்சியான ஒரு காட்சியைக் கண்டார். முக்கிய மற்றும் சாதாரண பிரஜைகள் அவரை அன்புடன் வரவேற்றனர். அவரும் அவர்கள் விரும்பிய ஆசிகளையெல்லாம் வழங்கினார். (பக்கம் 61 - 65)




படம் மூன்று : பிருது மன்னர் குமாரர்களின் முன் வணங்கியபின், அவர்களுடைய பாதங்களைக் கழுவி, அந்நீரினைத் தன் தலையில் தெளித்துக் கொண்டார். இம்மரியாதைக்குரிய செயலினைச் செய்ததின் மூலம் உயர்ந்த ஆன்மீக பெரியவர்களை எவ்வாறு வரவேற்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டினார். (பக்கம் 146)




படம் நான்கு : பிருது மன்னர் தன் விமானத்தில் வைகுண்டத்தை நோக்கிச் செல்ல, அவரது மனைவியும் அவளது விமானத்தில் அவரைப் பின்தொடர்ந்தாள். அதைக் கண்ட தேவர்களின் மனைவியர், "கற்புக்கரசியான இவள் தன் புனிதச் செயல்களினால் தன் கணவனைத் தொடர்ந்து மேலுலகம் செல்வதைப் பாருங்கள்" என்று கூறினர். (பக்கம் 283)



படம் ஐந்து : சிவபெருமான் பிரசேதர்களிடம் கூறினார், "நீங்கள் தூய்மையான உள்ளத்துடன் அரசனுக்குரிய காரியங்களை ஆற்றுவீராக. பகவானின் திருவடித் தாமரைகளின் மீது மனதை வைத்து நான் கூறிய மந்திரத்தை ஜெபிப்பீராக. உங்களுக்கு மங்கலம் உண்டாகும்." (பக்கம் 407)




படம் ஆறு : பகவானை அவரது பக்தர்கள் வணங்கும் அதே ரூபத்தில் சிவபெருமான் காண விரும்பினார். அது பிருந்தாவனத்து கோபியர்களை அனுபவிப்பவரான கிருஷ்ணரால் காட்டப்படும் ரூபமாகும். (பக்கம் 363)



படம் ஏழு : கிருஷ்ணரின் எழில் தோற்றம் மழைக் காலத்தில் தோன்றும் கார்மேக வண்ணம் போன்றது" என்று சிவபெருமான் விவரித்தார். குறிப்பாக பிருந்தாவன லீலைகளின் போது கிருஷ்ணர் அவரது அழகைக் காட்டினார். அங்கு தமது தோழர்களான இடைச் சிறுவர்களுடன் எப்பொழுதும் அவர் மதிய உணவை உட்கொள்வார். (பக்கம் 365)




படம் எட்டு : மன்னர் பிராசீனபர்ஹிஷத் ஆன்மீக வழிகாட்டலுக்காக நாரதரை அணுகியபோது, நாரதர் மன்னன் புரஞ்சயனைப் பற்றிய உருவகமான கதையை கூறத் துவங்கினார். இவ்விதமாக பௌதிக வாழ்வின் ஆபத்துகளைப் பற்றி மன்னருக்கு அவர் உபதேசித்தார். (பக்கம் 426)



படம் ஒன்பது : புரஞ்சய மன்னனை மரணம் நெருங்கியபொழுது, யமராஜனும் அவரது தூதர்களும் அவனைப் பிடிக்க உடனே அவனருகில் சென்றனர். அந்த தூதர்கள் அவனை ஒரு மிருகம்போல் கட்டி, நீதி மன்றத்திற்கு இழுத்துச் செல்லத் துவங்கினர். (பக்கம் 617)




படம் பத்து : ஸ்ரீ கிருஷ்ணர் அவரது பரமாத்ம அம்சத்தில் ஒவ்வொரு ஜீவராசியின் "இதய ஏரிக்குள்" வாழ்கிறார். அவரது நான்கு கைகள் ஒரு தாமரை, சக்கரம், சங்கு, கதை ஆகியவற்றை ஏந்தியுள்ளன. (பக்கம் 661)



படம் பதினொன்று : கால அலைகளால் அலைக்கழிக்கப்படும் ஜட இயற்கையாகிய பெரும் சமுத்திரம், சிறு பொறி போன்ற ஜீவராசிகளை என்றென்றும் பல்வேறு வகையான நிலைகளில் புகுத்திக் கொண்டிருக்கிறது. இவ்வாறாக இந்த ஆத்மாக்கள் தங்களுடைய விதிக்கேற்ப பல உயிரினங்களுக்கிடையில் சஞ்சரிக்கின்றன. (பக்கம் 714)



படம் பன்னிரண்டு : இங்கு திவ்ய லோகமான கோலோக பிருந்தாவனத்தில் காட்டப்படும் இந்த கிருஷ்ணர்மீது மனதை நிலை நிறுத்துவதே மனித வாழ்வின் பூரணத்துவமாகும். இங்கு அவர் தமது புல்லாங்குழலை ஊதியும், யமுனைக் கரையில் லீலைகள் புரிந்தும் மகிழ்கிறார். (பக்கம் 725)



படம் பதின்மூன்று : பிரசேதர்கள் தங்கள் தந்தையான பிராசீனபர்ஹியின் உத்தரவை நிறைவேற்ற, சிவபெருமானால் கொடுக்கப்பட்ட ஸ்தோத்திரங்களை ஜபித்தபடி, பத்தாயிரம் ஆண்டுகளாக கடலுக்கடியில் கடுந்தவம் புரிந்தனர். (பக்கம் 804)



படம் பதினான்கு : "பகவானே, தாங்கள் ஆலயத்திலுள்ள விக்கிரக வடிவில் தோன்றி உங்களுடைய தீன பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறீர்கள். தயவுகூர்ந்து எங்களை உங்களுடைய நித்தியத் தொண்டர்களாகப் பாவிக்க வேண்டுகிறோம்." பக்கம் 840)




படம் பதினைந்து : பிரசேதர்கள் கிட்டதட்ட பூமியிலுள்ள எல்லா மரங்களையும் எரித்துச் சாம்பலாக்கிய வேளையில், எஞ்சியிருந்த மரங்கள் பிரசேதர்களிடம் மிகவும் அச்சம்கொண்டு, பிரம்மாவின் அறிவுரைப்படி தங்களுடைய மகளான மாரீஷாவை அவர்களிடம் ஒப்படைத்தன. (பக்கம் 866)



**படம் ஒன்று:** பரமபுருஷராகிய பகவான் ஸ்ரீகிருஷ்ணர் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமது சுய ஆன்மீக வடிவில் இவ்வுலகில் அவதரித்துத் தமது சகாக்களுடன் உன்னத லீலைகள் புரிந்தார். இங்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணரும், அவரது தமையனான பலராமரும், அவர்களது ஆயர்குல நண்பர்களும் தங்கள் பசுக்களுடன் பிருந்தாவனக் காட்டில் நுழைகின்றனர். மாமுனிவரான சகதேவ கோஸ்வாமி கூறுகின்றார்.


"வண்டுகள், மிருகங்கள் மற்றும் பறவைகளின் இனிய ஓசைகளால் சூழப்பட்டதும், மகாத்மாக்களின் மனங்களையொத்த தெளிந்த நீருடைய ஏரியாலும், நூறு இதழ்களுடைய தாமரைகளின் நறுமணத்தை ஏந்தி வந்த தென்றல் காற்றினாலும் வளப்படுத்தப்பட்டதுமான அந்த வனத்தைப் பரமபுருஷர் பார்வையிட்டார். இதையெல்லாம் கண்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அந்த மங்களகரமான சூழ்நிலையை அனுபவிக்க முடிவு செய்தார். (பக்கம் 74-76)



படம் இரண்டு: கழுதை அசுரர்கள் தாக்கியபோது கிருஷ்ணரும், பலராமரும் எளிதில் அவற்றின் பின்னங்கால்களைப் பிடித்துச் சுழற்றி அவற்றைப் பனை மரங்களின் உச்சிகளில் எறிந்தனர். (பக்கம் 98-99)



**படம் மூன்று:** தன்மீதுள்ள அன்பின் காரணமாக கோகுல வாசிகள் பெருந்துயரில் மூழ்கியிருப்பதைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணர், காளிய நாகத்தின் பிடியிலிருந்து விடுபட்டு அதன் தலைகளின் மேல் நடனமாடத் துவங்கினார். பகவானின் சக்திவாய்ந்த அற்புத நடனம் அந்த நாகத்தின் ஆயிரம் தலைகளையும் நசுக்கி உடைத்தது. (பக்கம் 128-134)




படம் நான்கு: இந்திர பூஜையை விட்டுவிட்டு, அதற்காக சேகரிக்கப்பட்ட பொருட்களைக் கொண்டு கோவர்த்தன மலையையும், பிராமணர்களையும், பசுக்களையும் பூஜிக்க வேண்டும் என்ற பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விண்ணப்பத்திற்கு இசைந்து, அவரது தந்தையான நந்த மகாராஜனும் அவ்வாறே செய்தார். இதனால் கடுங்கோபமடைந்த இந்திரன் விரஜ வாசிகளைத் துன்புறுத்த ஸம்வார்தகம் என்ற நாசகார மேகங்களை அனுப்பி அவர்கள் மீது கல்மழையை பொழியச் செய்தார். இதனால் பெருந்துயருற்ற ஆயர்குலத்தினர் கிருஷ்ணரைத் தஞ்சமடைந்தனர்.

இது இந்திரனின் வேலை என்பதை அறிந்த கிருஷ்ணர் அந்த தேவரின் பொய் அகங்காரத்தை தவிடு பொடியாக்க முடிவு செய்து, கோவர்த்தன மலையை ஒரே கையால் மேலே தூக்கிப் பிடித்து, அதனால் ஆயர்குலம் முழுவதற்கும் அடைக்கலம் அளித்தார். கடைசியாக இந்திரன் ஸ்ரீகிருஷ்ணரின் யோக சக்தியை உணர்ந்து மழை மேகங்களைப் பின்வாங்கச் செய்யும் வரை தொடர்ந்து ஏழு நாட்களுக்கு பகவான் மலையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார்.(பக்கம் 369-386)



படம் ஐந்து: ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீமதி ராதாராணியுடன் ராஸ நடனத்திலிருந்து மறைந்து விட்டதைக் கண்ட மற்ற கோபியர்கள், "நிச்சயமாக அந்த கோபி சர்வசக்தி படைத்த பகவான் கோவிந்தரைப் பூரணமாக வழிபட்டிருக்க வேண்டும். அதனால் தான் அவர் அவளிடம் மகிழ்ந்து, நம்மையெல்லாம் புறக்கணித்துவிட்டு அவளை மட்டும் தனிமையான இடத்திற்கு அழைத்துச் சென்று விட்டார்" என்று கூறினர். (பக்கம் 535)



**படம் ஆறு:** தங்களுக்கு மிகப் பிரியமான கிருஷ்ணர் திரும்பி வந்ததைக் கண்ட கோபியர்கள் பரவசமடைந்தனர். அவரிடமுள்ள அன்பினால் அவர்களது விழிகள் மலர்ந்தன. அது அவர்களது உடல்களுக்குள் உயிர் திரும்பி வந்தது போல் இருந்தது.(பக்கம் 571)



படம் ஏழு: பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட முதல் ஜீவராசியான பிரம்ம தேவர் தனது சமஸ்கிருத இலக்கிய நூலான பிரம்ம-சம்ஹிதையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "கிருஷ்ணர் ராதையுடன் தமது சொந்த கோலோகத்தில் வாசம் புரிகிறார். ராதை அவரது ஆன்மீக ரூபத்தை அப்படியே ஒத்திருக்கிறாள். அவள் ஹலாதினீ என்ற ஆனந்த சக்தியின் இருப்பிடமாவாள். ராதையும் அவளது விரிவாம்சங்களாகிய தோழிகளும் நித்திய ஆன்மீக சுவையில் திளைக்கும்படி அவர் செய்கிறார். இந்த கோவிந்தனை ஆதி-புருஷரை நான் வணங்குகிறேன். "கோபியர்கள் தங்கள் திறமைகளையெல்லாம் முழுமையாக உபயோகித்து இந்த தெய்வீக ஜோடியின் ஆன்மீக ஆனந்தத்தைப் பெருக்குவதன் மூலம் ராதை மற்றும் கிருஷ்ணரின் உன்னத லீலைகளில் அவர்களுக்கு உதவியாக உள்ளனர். (பக்கம் 574-575)



**படம் எட்டு:** கோலாகலமான ராஸ நடனத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் விரிவடைந்து ஒவ்வொரு ஜோடி கோபியர்களுக்கும் நடுவில் பிரவேசித்தார். யோக சக்திக்கு நாயகரான அவர் அவர்களது கழுத்துக்களைச் சுற்றி தம் கைகளை வைத்த போது, ஒவ்வொரு கோபியும் தன் பக்கத்தில் மட்டும் அவர் நிற்பதாக எண்ணினாள். ராஸ நடனத்தைக் காணும் பேராவலுடன் தேவர்களும் அவர்களது மனைவிகளும் நூற்றுக் கணக்கான விண்ணுலகு விமானங்களில் வந்து ஆகாயத்தில் குழுமினர்.


பிறகு வானிலிருந்து மலர்மாரி பொழிய பேரிகைகள் முழங்கின. முக்கிய கந்தர்வர்கள் தங்கள் மனைவிகளுடன் பகவான் ஸ்ரீகிருஷ்ணரின் மாசற்ற கீர்த்திகளைப் பாடினர். ராஸ நடன வட்டத்தில் தங்களுக்குப் பிரியமான ஸ்ரீகிருஷ்ணருடன் ஆடியபொழுது அவர்களது கை வளைகளிலிருந்தும், கால் கொலுசுகளிலிருந்தும், ஒட்டியான சலங்கைகளிலிருந்தும் பேரொலி எழுந்தது. நடனமாடும் கோபியர்களின் மத்தியில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் தங்க ஆபரணங்களுக்கிடையிலுள்ள கண்கவரும் நீலக்கல் போல் பிரகாசித்தார். (பக்கம் 590-592)



**படம் ஒன்பது:** ராஸ நடனத்திற்குப் பின் ஸ்ரீகிருஷ்ணர் கோபியர்களின் களைப்பைப் போக்க அவர்களுடன் யமுனை நதிநீரில் இறங்கினார். அங்கு சிரித்தபடி நின்றிருந்த கோபியர்கள் உடனே நாற்புறமும் தம்மீது நீரை வாரி இறைப்பதை அவர் கண்டார். (பக்கம் 604)



படம் பத்து: ஸ்ரீகிருஷ்ணர் கர்வம் மிகுந்த சலவைக்காரனை சிரச்சேதம் செய்தபின், தமக்கு மிகவும் பிடித்தமான சில ஆடைகளை அணிந்து கொண்டார். இடைச்சிறுவர்களும் அவரவருக்குப் பிடித்தமான அழகிய ஆடைகளை எடுத்துக் கொண்டனர். (பக்கம் 817)




படம் பதினொன்று: பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கம்சனைக் கால் பரப்பி விழச் செய்து, திரும்பத் திரும்ப அவனைக் குத்தினார். கிருஷ்ணரின் முஷ்டிக் குத்துகளாலேயே கம்சன் தன் உயிரைத் துறந்தான்.(பக்கம் 894)



**படம் ஒன்று:** ஆகாச வாணியைக் கேட்டதும், துஷ்டனும் பாவியுமான கம்சன் தன் தங்கையின் தலை முடியைப் பற்றிக் கொண்டு, தன் வாளை உருவி அவளை சிரச் சேதம் செய்யத் தயாரானான். *(பக்கம் 57)*



படம் இரண்டு: பரமபுருஷராகிய ஸ்ரீ கிருஷ்ணர் தம் தாய் தந்தையருக்கு உபதேசித்தபின், தம்மை சிறிய ஒரு மனிதக் குழந்தையாக மாற்றிக் கொண்டார். (பக்கம் 246)



**படம் மூன்று:** தயாள குணமுடைய நந்த மகாராஜன், தனக்கு மகன் பிறந்த ஆனந்தத்தில் மூழ்கியவராய், கோகுல வாசிகள் வேத முறைப்படி பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். (பக்கம் 296-297)



**படம் நான்கு:** கிருஷ்ணர் திடீரென்று தம் கால்களை மேலே நீட்டி வண்டியை உதைத்தார். அவரது சிறிய கால்கள் புதிதாக முளைத்த இலைகளைப் போல் மென்மையானவை என்றாலும், அந்த வண்டி வேகமாக மேலே கிளம்பி தலைகீழாக விழுந்து நொறுங்கியது. *(பக்கம் 363-364)*




**படம் ஐந்து:** சுழற்காற்றின் வடிவை ஏற்ற அசுரன் கிருஷ்ணரை ஆகாயத்தில் மிகவும் உயரமாக தூக்கிச் சென்றான். ஆனால் கிருஷ்ணர் திடீரென்று அந்த அசுரனை விட அதிக கனமாக மாறி அவன் மேலே செல்வதைத் தடுத்தார். கிருஷ்ணர் அசுரனுக்கு ஒரு மலைபோல் கனத்தார். *(பக்கம் 381-382)*




**படம் ஆறு:** சிலசமயம் கிருஷ்ணரும், பலராமரும் உக்கிராண அறைக்குள் நுழைந்து வெண்ணெயும், தயிறும் திருடி அதை குரங்குகளுக்கும் கொடுப்பார்கள். ஒரு நாள் அப்படிச் செய்யும் பொழுது தாய் யசோதை அவர்களைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டாள். (பக்கம் 424)



**படம் ஏழு:** *அகலத் திறந்த கிருஷ்ணரின் வாய்க்குள் அசைவன, அசையாதன ஆகிய ஜீவன்கள், விண்வெளி, அனைத்துத் திசைகள், அனைத்து கிரக அமைப்புக்கள் முதலியவை கொண்ட முழு சிருஷ்டியையும் தாய் யசோதை கண்டாள். (பக்கம் 431)*



**படம் எட்டு:** தாய் யசோதைக்கு அஞ்சியது போல் குழந்தை கிருஷ்ணர் ஓட்டம் பிடித்தார். இறுதியாக தம் தாய்க்குத் தம் மீதுள்ள பேரன்பின் காரணமாக, அவளால் பிடிக்கப்பட கிருஷ்ணர் இசைந்தார். (பக்கம் 459)




**படம் ஒன்பது:** சில சமயம் நந்த மகாராஜன் தன் மர செருப்புகளைக் கொண்டு வரும்படி கூறுவார். கிருஷ்ணரும் மிகவும் சிரமப்பட்டு அவற்றைத் தம் தலைமேல் சுமந்து வருவதுபோல் தம் தந்தையிடம் செல்வார். (பக்கம் 523)




**படம் பத்து:** தன்னிடம் வந்த கிருஷ்ணரின் கைகளில் பழ வியாபாரி கனிந்த பழங்களை நிரப்பினாள். இதனாள் அவளது பழக்கூடை உடனே ஆபரணங்களாலும், தங்கத்தாலும் நிறைந்தது. (பக்கம் 525)




**படம் பதினொன்று:** கூரிய அலகுடைய ஒரு கொக்கின் உருவிலிருந்து பகாசுர னைக் கண்டு இடைச் சிறுவர்கள் பயந்துவிட்டனர். அப்பெரிய அசுரன் அந்த நீர்த் தேக்கத்திற்கு வந்து உடனே கிருஷ்ணரை விழுங்கிவிட்டான்.·(பக்கம் 548)



**படம் பன்னிரண்டு:** எட்டு மைல் நீளமுள்ள மிகப்பெரிய உடலை ஏற்ற அகாசுரன், கிருஷ்ணரையும், அவரது நண்பர்களையும் விழுங்கிவிட எண்ணி, பெரிய மலைக்குகை போல் வாயைத் திறந்தபடி சாலையில் படுத்திருந்தான். (பக்கம் 572)



**படம் பதின்மூன்று:** கிருஷ்ணரும், அவரது நண்பர்களும் யமுனைக் கரையிலுள்ள ஓரழகிய இடத்தில் அமர்ந்தபடி, தங்கள் உணவுப் பைகளைத் திறந்து மிகவும் ஆனந்தமாக உணவருந்தத் துவங்கினர். *(பக்கம் 603-604)*



**படம் பதினான்கு:** பிரம்மா பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கற்றுகளும் அவற்றை மேய்க்கும் சிறுவர்களும் நீலநிற மேனியுடன், மஞ்சள் பட்டாடை அணிந்த விஷ்ணு-மூர்த்திகளாக மாறினர். *(பக்கம் 641)*



**படம் பதினைந்து:** பிரம்மதேவர் உடல் நடுங்க, ஆழ்ந்த சிந்தனையுடன் மிகவும் அடக்கமாக, தழுதழுத்த வார்த்தைகளால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைத் துதிக்கலானார். (பக்கம் 669)




**படம் ஒன்று :** அம்பரீஷரைத் திட்டிய துர்வாசரின் முகம் கோபத்தால் சிவந்தது. அம்பரீஷரைத் தண்டிக்க அவர் தன் தலையிலுள்ள ஜடாமுடியைக் கிள்ளியெடுத்து, காலாக்கினி போன்ற ஓரசுனை உண்டாக்கினார். (பக்கம் 107)




படம் இரண்டு : துர்வாசர் எல்லாத் திசைகளிலும் எல்லா இடங்களுக்கும் ஓடினார். ஆனால் தான் செல்லும் இடங்களுக்கெல்லாம் பகவானுடைய சுதர்சன சக்கரத்தின் அணைக்க முடியாத தீ தன்னைப் பின் தொடர்ந்து வருவதை அவர் கண்டார். (பக்கம் [illegible])



படம் மூன்று : பிருந்தாவனத்தில் ஸ்ரீ கிருஷ்ணர் பூரணமானவராக இருக்கிறார். இருப்பினும் தமது உன்னத ஆனந்தத்தை அதிகரிப்பதற்கு, கோபியர்களைப் போன்ற தமது பக்தர்களின் ஒத்துழைப்பை அவர் நாடுகிறார். இத்தகைய பக்தர்கள் அவருக்கு மிகவும் பிரியமானவர்கள். (பக்கம் 120)




படம் நான்கு : அம்பரீஷர் சுடர்விட்டெரியும் சக்கரத்தை நோக்கி, ''சுதர்சன சக்கரமே, பிரபஞ்சத்தை காப்பவரே, எங்களுடைய வம்சத்தின் நன்மைக்காக தயவுகூர்ந்து இந்த பிராமணரை மன்னித்து அருள் புரியுங்கள்'' என்று வேண்டினார். (பக்கம் 133-134)




**படம் ஐந்து :** தன் தந்தையின் சகோதரர்களுடைய சாம்பல் குவியலுக்கிடையில் பகவான் கபிலர் அமர்ந்திருப்பதையும் அவருக்கருகில் காணாமற்போன யாகக் குதிரை நிற்பதையும் கண்ட அம்சுமான், கரம் கூப்பி மிகவும் கவனமாக, மரியாதையுடன் பகவானைத் துதித்தார். (பக்கம் 221)



படம் ஆறு : பகீரத மகாராஜனின் வேண்டுகோளுக்கு இணங்கி, பகவான் விஷ்ணுவின் பாதங்களிலிருந்து பெருக்கெடுக்கும், புனிதப்படுத்தும் தன்மையுடைய கங்கை நீரின் வேகத்தைச் சிவபெருமான் தன் தலைமேல் தாங்கிக் கொண்டார். (பக்கம் 240)




படம் ஏழு : அன்னை சீதையின் சுயம்வரச் சபையில், உலகின் சிறந்த வீரர்களுக்கிடையில், பகவான் ராமச்சந்திரர் சிவ தனுசை உடைத்தார். (பக்கம் 278)



படம் எட்டு : பகவான் ராமச்சந்திரர் வெல்லுதற்கரிய தமது வில்லையும் அம்புகளையும் ஏந்தியபடி, தமது நாயகியான அன்னை சீதையுடனும், தம்பி லக்ஷ்மணருடனும் பதினான்கு ஆண்டுகள் வனவாசத்தை மேற்கொண்டார். (பக்கம் 279-280)




**படம் ஒன்பது :** பகவானின் விசுவாசமுள்ள வானரப்படை பெரிய பாறைகளைக் கடலில் தூக்கியெறிந்தது. பகவானின் சக்தியால் கடலில் மிதந்த அப்பாறைகள் இலங்கைக்குச் செல்லும் பாலமாக அமைந்தன. (பக்கம் 290)



**படம் பத்து :** பகவான் பரசுராமர் சென்ற இடங்களிலெல்லாம் எதிரிகள் கைகளும், கால்களும், தோள்களும் துண்டிக்கப்பட்டு விழுந்தனர். அவர்களுடைய தேரோட்டிகள் கொல்லப்பட்டு, யானைகளும், குதிரைகளும் அழிக்கப்பட்டன. (பக்கம் 434)




**படம் பதினொன்று :** சர்மிஷ்டை அறியாமல் தேவயானையின் உடையை உடுத்திக் கொண்டாள். இதனால் தேவயானை கோபங்கொண்டு, ''ஓ, பணிப்பெண்ணாகிய இந்த சர்மிஷ்டையின் செயலைப் பாருங்கள்'' என்று கூறினாள். (பக்கம் 482)




**படம் பன்னிரண்டு :** யயாதி தன் மகளிடம் உண்மையாக நடந்து கொள்ளவில்லை என்பதைத் தன் மகளிடமிருந்து அறிந்த சுக்ராசாரியர், கடுங் கோபங்கொண்டு, "பெண் பித்துப்பிடித்த நன்றிகெட்ட மூடனே, நீ முதுமையால் பீடிக்கப்படுவாயாக" என்று அவரைச் சபித்தார். (பக்கம் 497-498)




**படம் பதின்மூன்று :** மேன்மைக்குரிய ரந்திதேவ மகாராஜன் நாற்பத்தெட்டு நாட்கள் உபவாசத்தை நிறைவேற்றிய பிறகு, நெய்யால் சமைக்கப்பட்ட மிகச்சிறந்த உணவு அவருக்காகக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதை அவர் உண்ணாமல் சில பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்து விட்டார். (பக்கம் 571-577)



படம் பதினான்கு : கருவிலுள்ள சிசு மாயையினால் பாதிக்கப்பட மாட்டான் என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் உறுதியளித்தார். இவ்விதமாக குழந்தை வெளியே வந்தது. ஆனால் உடனே அது வீட்டைவிட்டு வெளியேறி, சுகதேவ கோஸ்வாமி என்ற மிகச் சிறந்த முனிவராக மாறியது. (பக்கம் 584-585)



**படம் பதினைந்து :** துர்வாச முனியிடமிருந்து பெற்ற யோக சக்தியைச் சோதிக்க விரும்பிய குந்தி, சூரிய தேவனை அழைத்தாள். அவரும் அவள் ஆச்சரியப்படும்படி உடனே அவள் முன் தோன்றினார். (பக்கம் 653)




படம் ஒன்று : வைகுண்ட வாயில் காப்பான்களான ஜயனும் விஜயனும் பிரம்மாவின் ரிஷி குமாரர்களை உள்ளேவிட மறுத்தபோது ரிஷி குமாரர்கள் அவர்கள் இருவரையும் பூமியில் அசுரர்களாகப் பிறக்குமாறு சபித்தார்கள். (பக்கம் 49)



படம் இரண்டு : ஹிரண்யகசிபுவின் கடுந்தவத்தின் விளைவாக அவனது சிரத்திலிருந்து நெருப்பு கிளம்பியது. இந்த நெருப்பும் புகையும் ஆகாயம் முழுவதும் பரவி அண்டங்களின் மேற்பகுதியையும் கீழ்ப்பகுதியையும் தீக்கிரையாக்கியது. (பக்கம் 125)




படம் மூன்று : ஹிரண்யகசிபுவின் தேகத்தின் மீது பிரம்மா புனித நீரைத் தெளித்தபோது கிருமிகள் அரித்த அசுரனின் தேகத்திலிருந்து வஜ்ராயுதத்தைவிட வலுவான அவயங்களைக் கொண்ட அரக்கன் தோன்றினான். (பக்கம் 145)



படம் நான்கு : ''வெட்டுங்கள்! குத்திக் கிழியுங்கள்!'' என்ற கர்ஜனையுடன் ஹிரண்யகசிபுவின் ஏவலர்கள் பிரகலாதனை தாக்க முற்பட்டனர். மௌனமாக அமர்ந்து பரமபுருஷ பகவானை பிரகலாதன் தியானித்தான். (பக்கம் 269)



**படம் ஐந்து :** ஹிரண்யகசிபுவின் ஏவலர்கள் பிரகலாதனை மலை உச்சியிலிருந்து பிடித்துத்தள்ளி கொல்லப்பார்த்தனர். எப்போதும் போல் பரமபுருஷ பகவான் பிரகலாதனை கரங்களில் ஏந்திப் பிடித்து ஆபத்திலிருந்து காப்பாற்றினார். (பக்கம் 272)



படம் ஆறு : பிரகலாதனின் தாயை இந்திரன் கைது செய்யப்போகும்போது, நாரத முனிவர் தோன்றி, ‘‘தேவராஜனே! இந்தப் பெண் ஒரு பாபமும் அறியாதவள். அவளை உடனேயே விடுவிப்பாயாக’’ என்று கூறினார். (பக்கம் 330)




படம் ஏழு : அரக்க குணம் படைத்த ஆசிரியர்கள் இல்லாதபோது, பிரகலாதன் சகமாணவர்களுக்கு புனித நாமாக்கள் உச்சரிப்பில் தொடங்கும் கிருஷ்ண பக்தி விஞ்ஞானத்தைக் கற்பித்தான். மாணவர்கள் ஆசிரியர்களின் துர்போதனைகளைத் தவிர்த்து பிரகலாதன் கூறியதை ஏற்றுக்கொண்டனர். (பக்கம் 397)




படம் எட்டு : பிரபு நரசிம்மதேவர் ஹிரண்யகசிபுவை லாவகமாய் தூக்கித் தன் மடியில் கிடத்தினார். பிறகு மண்டபத்தின் நுழைவாயிலில் வைத்து அரக்கனை தன் கூர்மையான நகங்களால் பிய்த்தெடுத்தார். (பக்கம் 428)



**படம் ஒன்பது :** ஹிரண்யகசிபுவின் பல்லாயிரக்கணக்கான போர் வீரர்கள் பிரபு நரசிம்மதேவருடன் போர் புரிய வந்தனர். பகவானோ அவர்களை தம் கூரிய நகங்களால் சின்னாபின்னப்படுத்தினார். (பக்கம் 430)



**படம் பத்து :** பிரபு நரசிம்ம தேவரின் கரம் தன் சிரத்தில் பட்டவுடன் பிரகலாதனிடமிருந்த பூவுலக களங்கங்களும் ஆசைகளும் அடியோடு மறைந்தன. பிறகு அவன் பகவானைப் பிரார்த்திக்கத் தொடங்கினான். (பக்கம் 468)



**படம் பதினொன்று :** அசுரர்களை சிவபிரான் சரமாரியாக அம்பு பாணங்களால் வதைத்த பிறகு தான் படைத்த அமிர்தம் நிறைந்த கிணற்றில் மாயாதானவன் அசுரர்களை தோய்த்தெடுத்து உயிர்பெறச் செய்தான். (பக்கம் 609)



படம் பன்னிரண்டு : பிரபு கிருஷ்ணர் அளித்த இராணுவ பரிவாரங்கள் உதவியுடன் சிவபிரான் வில்லில் அம்பு தொடுத்து மூன்று அரக்கர்களின் கோட்டைகளையும் சாம்பலாக்கினார். (பக்கம் 608)



படம் பதின்மூன்று : மானுட வர்கத்தின் அதி உன்னத ஆன்மிக ஆசானாகிய நாரத முனிவர் மாமன்னன் யுதிஷ்ட்டிரனுக்கு இலட்சிய நடத்தை, சமூக அமைப்பு, இல்வாழ்க்கை போன்றவற்றை உபதேசித்தார். (பக்கம் 623)




படம் பதினான்கு : ஒவ்வொரு இதயத்திலும் வீற்றிருக்கும் பரமபுருஷ பகவான் இயந்திரம் ஒன்றின் மீது அமர்ந்தது போன்ற ஜட சக்தியால் அலைகழிக்கப்படும் ஜீவன்களை இயக்குகிறார். (பக்கம் 768)




**படம் பதினைந்து :** ''தீங்கிழைத்ததால் அழகிழந்து தாழ்ந்த குலத்தில் உடனடியாக பிறப்பாயாக'' என்று பூமி புத்ரர்கள் உபாபரணனை சபித்தனர். (பக்கம் 858)



படம் ஒன்று: பரமாத்மா எனப்படும் பரமபுருஷரின் ஓரம்சம், உடலினுள் இதயப் பிரதேசத்தில் வாழ்கிறார். பகவானின் சிறப்புமிக்க லீலைகளும், அவரது புன்னகை பூத்த முகத்தில் பிரகாசிக்கும் பார்வையும் அவருடைய பரந்த அனுக்கிரகத்தின் அடையாளங்களாகும். (பக்கம் 84-88)



படம் இரண்டு: அஷ்டாங்க யோக முறையைப் பின்பற்றும் தியான பக்தன், தன் உயிர்க் காற்றை நாபியிலிருந்து இதயத்திற்கும், பிறகு மேல்வாயின் மூலஸ்தானத்திற்கும், அதன்பின் புருவங்களுக்கு மத்தியிலுள்ள இடைவெளிக்கும், இறுதியாக மூளைத் துவாரத்திற்கு வெளியிலும் தள்ள வேண்டும். இவ்வாறாக பௌதிகத் தொடர்பை விட்டு, பரமபதத்தை அவன் அடைகிறான். (பக்கம் 103-106)



படம் மூன்று: பிரம்மா தியானத்தில் அமர்ந்திருந்த பொழுது, கிருஷ்ணரின் குழலோசை அவரது செவிக்குள் ஓம் எனும் வேத மந்திரமாகப் புகுந்தது. இவ்வாறாக வேத ஞானத்தை முழுமையாக அடையப் பெற்ற பிரம்மா, அனைத்து ஜீவராசிகளுக்கும் மூல ஆன்மிக குருவானார். (பக்கம் 127-128)



படம் நான்கு: பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் முக்கியமான பத்து லீலாவதாரங்கள்: (1) மீன் (மத்ஸ்யம்); (2) ஆமை (கூர்மம்); (3) பன்றி (வராஹம்); (4) பாதி மனிதன், பாதி சிங்கம் (நரஸிம்ஹ - தேவர்); (5) குள்ள பிராமணர் (வாமன தேவர்); (6) பரசுராமர்; (7) ராமச்சந்திரர்; (8) அவதாரியான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்; (9) புத்தர்; மற்றும் (10) கல்கி. (பக்கம் 203-204)



படம் ஐந்து: நாரத முனி தம் தந்தையான பிரம்ம தேவரை அணுகி, பிரபஞ்சத்தின் மூல சிருஷ்டிகர்த்தா யாரென்று கேட்க, பிரம்மாவும், அவர் பரம புருஷரான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் என்று விடையளித்தார். (பக்கம் 246-257)



படம் ஆறு: பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தமது பிரகாசமான ஆன்மிக உலகமான கோலோக பிருந்தாவனத்தில் நித்தியமாக வாழ்கிறார். அங்கு நித்திய முக்தர்களான தமது சகாக்களுடன் அவர் உன்னத ஆனந்தத்தை அனுபவிக்கிறார். ஜடப் பிரபஞ்சங்களைப் படைப்பதற்காக அவர் நான்கு கரங்களுடைய மகா விஷ்ணுவாக விரிவடைகிறார். காரணக் கடலில் படுத்திருக்கும் அவரது தோல் துவாரங்களிலிருந்து எண்ணற்ற பிரபஞ்சங்கள் உற்பத்தியாகின்றன. (பக்கம் 285-286)



படம் ஏழு: பன்றி அவதாரமான பகவான் வராஹர், பூமியை கர்போதகக் கடலின் அடியிலிருந்து தூக்கிக் கொண்டு வரும்பொழுது, கொடிய அசுரனான இரண்யாக்ஷன் அவரைத் தாக்க, பெரும் போர் மூண்டது. (பக்கம் 364-365)



படம் எட்டு: பகவான் நரசிம்ம தேவர் சக்தி மிக்க அசுரனான இரண்யகசிபுவைத் தம் மடியில் வைத்து, அவனது இதயத்தைப் பிளந்து, குடலையும் பிடுங்கினார். (பக்கம் 388-389)



படம் ஒன்பது: கஜேந்திரன் எனும் யானை, தன்னை முதலையிடமிருந்தும், பௌதிக வாழ்விலிருந்தும் விடுவிக்க வந்த பகவான் விஷ்ணுவை நோக்கி, ஒரு தாமரைப் பூவை மேலே உயர்த்தி, பிரார்த்தனையுடன் அதை அர்ப்பணம் செய்தது. (பக்கம் 389-393)



படம் பத்து: நீண்ட வனவாசமும், இராவணனுடனான யுத்தமும் முடிந்தபின் முடி சூடிய பகவான் ராமச்சந்திரர், தம் சகோதரர் லக்ஷ்மணனுடனும், மனைவி சீதையுடனும், விசுவாசமுள்ள தொண்டர் ஹனுமானுடனும் அயோத்தியை ஆண்டு வந்தார். (405-409)



படம் பதினொன்று: பல அசுர மன்னர்களால் பூமி பாரம் ஏறிய பொழுது, அதன் துன்பத்தைப் போக்குவதற்காக, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தமது பூரண விரிவங்கமான பலராமருடன் அவதரித்தார். (பக்கம் 410)



படம் பன்னிரண்டு: கிருஷ்ணருக்கு விஷம் கொடுக்க முயன்ற பூதனை அரக்கி நசிந்து விழுந்ததும், ஆறு மைல் நீளமுடையது என்று கூறப்படும் தன் சுயமான பிரம்மாண்ட ரூபத்தை ஏற்றாள். (பக்கம் 413)



படம் பதிமூன்று: சகடாசுரன் எனும் அசுரன் ஒரு வண்டியின் ரூபத்தை ஏற்றிருந்தான். ஆனால் அந்த வண்டிக்கடியிலிருந்த படுக்கையில் படுத்திருந்த குழந்தை கிருஷ்ணர், வண்டி அரக்கனை கோபத்துடன் தம் கால்களால் உதைத்துக்கொன்றார். (பக்கம் 414-415)



படம் பதினான்கு: சங்கசூடனை வேகமாக விரட்டிச் சென்ற பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், தம் முஷ்டியால் குத்தி அந்த அரக்கனின் தலையைத் துண்டித்தார். (பக்கம் 423)




படம் பதினைந்து: மனித சமுதாயம் முற்றிலும் இழிவடையும் பொழுது, பகவான் கல்கியாக அவதரித்து, எல்லா அசுரர்களையும் கொன்று குவிப்பார். (பக்கம் 429-431)



**படம் ஒன்று:** பிரம்மாவின் மைந்தர்களான நான்கு குமாரர்கள் அவரிடம் கேட்ட புரியாத கேள்விகளுக்கு விடையளிப்பதற்காக பிரபு கிருஷ்ணர் பிரம்மாவின் முன் அன்னப் பறவை வடிவத்தில் தோன்றினார். (பக்கம் 19)




படம் இரண்டு: இதயத் தாமரையில் வீற்றிருக்கும் அழகான நான்கு புஜ விஷ்ணு வடிவத்தை தவயோகி தியானிக்கிறார். (பக்கம் 79)



**படம் மூன்று:** தவ யோகத்தில் முழுமைபெற்ற யோகியானவரால் தனது சரீரத்தை விருப்பம்போல் விட்டு விட்டு, விரும்பிய விண்ணுலகத்தை நோக்கி ஆத்மாவைச் செலுத்த முடியும். (பக்கம் 103)



படம் நான்கு: அளவில்லா அழகையும் ஆனந்தத்தையும் துய்க்க விரும்புகிறவர்களுக்கு பிரபு கிருஷ்ணர் மட்டுமே வழிபாட்டு தெய்வம். அழகையும் ஆனந்தத்தையும் ஸ்ரீ கிருஷ்ணர் தனது நித்திய உலகான கோலோக விருந்தாவனத்தில் முழுமையாக வெளிக்காட்டுகிறார். (பக்கம் 217)



படம் ஐந்து: குரு க்ஷேத்திர போர் முடிவில் சமய நெறிகளை கட்டிகாப்பவரான பீஷ்மதேவர் ரணகாயமடைந்து அம்பு படுக்கையில் கிடந்தார். மன்னர் யுதிஷ்டிரர் தம் நான்கு சகோதரர்களுடனும் பகவான் கிருஷ்ணருடனும் பீஷ்மர் கிடந்த இடத்திற்கு வந்தார்.

ஏராளமான உறவினர்களும் நண்பர்களும் இறந்த துக்கத்தை தாங்க முடியாதவரான யுதிஷ்டிரர் ஆன்மீகச் செம்மலும் பரமபுருஷ பகவானின் பக்தனுமான பீஷ்மதேவரின் உபதேசங்களை கவனமாக செவிகொடுத்து கேட்டார். பின்னர், ஆன்மீக ஞானத்தையும் பக்தி சேவையையும் உணர்த்தும் இதே பீஷ்மதேவர் உபதேசங்களை தம் பக்தன் உத்தவருக்கு ஸ்ரீ கிருஷ்ணர் எடுத்துரைத்தார். (பக்கம் 257)




**படம் ஆறு:** முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர் எல்லா ஜீவராசிகளின் உடலில் நான்கு புஜ பரமாத்மாவாக நுழைகிறார். (பக்கம் 229)



படம் ஏழு: ஜட பிரபஞ்சத்தை படைப்பதற்காக பிரபு கிருஷ்ணர் தம்மை மகாவிஷ்ணுவாக விஸ்தரித்துக் கொண்டு காரணக் கடலில் மிதந்து தம் சருமத்தின் நுண்துளை வாயிலாக கோடானுகோடி பிரபஞ்சங்களை வெளியேற்றுகிறார். (பக்கம் 597)




படம் எட்டு: உத்தவருக்கு ஸ்ரீ கிருஷ்ணர் உபதேசம் செய்தார்: "ஜடப் புலன் பொருட்களை விரும்பி ஏற்பவர்கள் அவற்றில் பற்று கொள்கின்றனர். இத்தகைய பற்றிலிருந்து காமம் எழுகிறது. இந்த காமத்திலிருந்து மனிதர்களுக்கிடையில் சச்சரவு மூள்கிறது.




இந்த சச்சரவிலிருந்து அடக்க முடியாத கோபம் பொங்கி எழ, அறியாமை எனும் காரிருள் சூழ்ந்து கொள்கிறது. இந்த அறியாமை நொடியில் மனிதனின் மதிநுட்பத்தை ஆட்கொள்கிறது." கள்ளக்காமம் பகவான் விவரித்த தொடர்ந்து கொண்டே போகும் துன்பம் தரும் உணர்ச்சி நிலைகளை குறிப்பிடுவதாகும். (பக்கம் 351-352)




படம் ஒன்பது: விஸ்வரூபம்: பகவான் கிருஷ்ணர் கூறுகிறார், ''அனைத்து உலகங்களின் படைப்பு, பாதுகாப்பு, பிறகு அழிப்பு முதலானவற்றை முடிவில்லாமல் வெளிப்படுத்தும் விஸ்வரூபத்தின் ஆதாரம் நானே.''


(பக்கம்494)



**படம் பத்து:** பத்ரிகாஸ்ரமத்திற்குப் புறப்படும் முன் உத்தவர் பகவான் கிருஷ்ணரின் தாமரைப் பாதங்களில் விழுந்து அவற்றை கண்ணீரால் நனைத்தார். (பக்கம் 665)




படம் பதினொன்று: பிரபாச போரின் உச்சக்கட்டத்தில் யாதவர்கள் பிரபு கிருஷ்ணர் மற்றும் பிரபு பலராமர் இவர்களையும் தாக்கினார்கள். இந்த இருவரும் பதிலடி கொடுத்து யாதவ குலத்தையே முற்றிலும் அழித்தார்கள். (பக்கம் 684)



**படம் பனிரெண்டு**: பகவான் கிருஷ்ணரின் பாதத்தை ஊடுருவுமாறு அம்பை செலுத்திய வேடன் ஜரா அவரின் மலர்ப் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கோரி அழுதான். (பக்கம் 688)




**படம் ஒன்று :** இரண்யாட்சன் வெகு கோபத்துடன் சீறிக் கொண்டு, விரைவாக பகவான் மேல் பாய்ந்து, அவரைத் தன் சக்தியுள்ள கதையால் அடித்தான். ஆனால் வெற்றிபெற்ற ஒரு யோகி மரணத்திலிருந்து தப்புவது போல், பகவான் சிறிது நகர்ந்து கொண்டு அந்த அடியிலிருந்து தப்பினார். (பக்கம் 40)



படம் இரண்டு : பகவான் விஷ்ணுவின் வழிகாட்டலின் கீழ் பிரம்மன் தன் அறிவுக் கூர்மையினைப் பயன்படுத்தி, அவரது ஸ்தூல மற்றும் சூட்சும உடல்களின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து பிரபஞ்சத்தைப் படைக்கத் துவங்கினார். (பக்கம் 100)



**படம் மூன்று :** கர்தம முனிவர் தன் மனைவியை மகிழ்விக்க விரும்பி, தன் யோக ஆற்றலை உபயோகித்து, உடனடியாக அவர் விருப்பத்தின்படி பயணம் செய்யும் ஒரு ஆகாய மாளிகையை உருவாக்கினார். (பக்கம் 259)



படம் நான்கு : பிந்து சரோவர ஏரிக்குள், தேவஹூதியின் பணிப் பெண்கள் மிகவும் மரியாதையுடன் அவளை விலையுயர்ந்த தைலங்களாலும் மருந்து நெய்யாலும் குளிப்பாட்டி, அவளது உடலை மறைக்க நல்ல புதிய பழுதில்லாத ஆடையை அவளுக்கு கொடுத்தனர். (பக்கம் 269)




**படம் ஐந்து :** கர்தம முனிவரின் ஆசிரமத்தில் தோன்றிய பிரம்மா கூறினார்: ''கர்தமரே, மெல்லிய இடையுடைய உங்களுடைய ஒன்பது பெண்கள் நிச்சயமாக கற்புள்ளவர்கள். அவர்கள் தங்கள் சொந்த சந்ததியினரால் படைப்பை அதிகரிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். அதனால், தயவு செய்து நீங்கள் உங்கள் பெண்களின் மனநிலை, ரசனைக்கு ஏற்றபடி அவர்களை முதன்மை பெற்ற முனிவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். அதன் மூலம் இந்த அண்டம் முழுவதும் உங்கள் புகழைப் பரப்புங்கள்.'' பிறகு பிரம்மா தேவஹூதியிடம் கூறினார்: ''மனுவின் புத்திரியே, பரமபுருஷர் இப்பொழுது உன் கர்பத்தில் இருக்கிறார். உன்னுடைய அறியாமை, சந்தேகம் ஆகிய முடிச்சுகளை அவர் துண்டிப்பார்.'' (பக்கம் 310)



**படம் ஆறு :** கர்தம முனிவர் தன் மகன் கபிலரிடமிருந்து தன்னுணர்வைப் பற்றிய உபதேசங்களைப் பெற்று அவரை வலம்வந்தபின் உடனே வனம் சென்றார். (பக்கம் 331)



படம் ஏழு : தன் தாய்க்கு சாங்கிய-யோக தியான மார்க்கத்தை விவரித்த பகவான் கபிலர் கூறினார், ''எப்பொழுதும் அவரது பக்தர்களுக்கு ஆசி வழங்க ஆவல் கொண்டுள்ள பகவான் காண்பதற்கு மிகவும் கவர்ச்சியாக உள்ளார். அவரது அமைதியான தன்மை, தியானத்தில் அவரைக் காண்பவர்களின் கண்களுக்கும், ஆத்மாக்களுக்கும் மகிழ்ச்சி அளிக்கிறது.'' (பக்கம் 559)



**படம் எட்டு :** யோகியானவர் எல்லா தேவர்களாலும் வழிபடப்படும் மேலானவராகிய பிரம்மாவுக்கு அன்னையாகிய, அதிர்ஷ்ட தேவதையான லக்ஷ்மியின் செயல்களைத் தன் மனத்தில் இருத்த வேண்டும். அவள் உன்னதமான பகவானின் கால்களைப் பிடித்து விடும் பணியினை மிகவும் கவனமாக செய்து வருகிறாள். அப்பொழுது பகவான் நாராயணர் கர்பக் கடலிலுள்ள ஆயிரம் தலை சேஷ நாகத்தின் மீது சயனிக்கிறார். சகல ஐசுவரியங்களுக்கும் மூலமான லக்ஷ்மி அனைவருக்கும் கவர்ச்சிகரமாக விளங்குகிறாள். (பக்கம் 569)




**படம் ஒன்பது :** ஆன்மிக அறிவற்ற மனிதன் மிகவும் வேதனையுடன் பரிதாபமாக இறக்கிறான். பிறகு கோபமுள்ள யமதூதர்களைத் தன் முன் கண்டு மிகுந்த பயத்தில் அவன் மலமும், சிறுநீரும் கழிக்கிறான். மாநிலத்தின் காவலர்களால் ஒரு குற்றவாளி தண்டனை கொடுத்து சிறைப்படுத்தப்படுவதுபோல, குற்றமான புலன் நுகர்ச்சியில் ஈடுபட்ட எவரும் அதுபோல யமதூதர்களால் சிறைப்படுத்தப் படுகின்றனர். அவர்கள் அவனை கழுத்தில் பலமான கயிற்றால் கட்டி, அவனது சூக்கும உடலைப் பிணைக்கிறார்கள். அதனால் அவன் பயங்கரமான தண்டனைக்கு ஆளாகலாம். (பக்கம் 675)




**படம் பத்து :** தீர்ப்பு அளிக்கப்பட்டபின், பாவியானவன் உடனே அவன் துன்புறுவதற்கென்று விதிக்கப்பட்ட சித்ரவதை தரும் தண்டனையில் ஈடுபடுத்தப்படுவான். அவன் தான் உயிருடன் எரிக்கப்படுவதை, அல்லது குடல்கள் பிடுங்கப்படுவதை, அல்லது மலை உச்சியிலிருந்து தள்ளப் படுவதை, அல்லது யானைகளால் அவயவங்கள் பிய்த்தெடுக்கப்படுவதை, அல்லது பிறருடைய சதையைத் தான் தின்பதை அல்லது தன் சதை பிறரால் தின்னப்படுவதைக் காணும்படி கட்டாயப்படுத்தப்படுகிறான். (பக்கம் 682)




**படம் பதினொன்று :** கபில தேவரின் சாங்க்ய-யோக முறையின் முதற்படி, ஆத்மாவுக்கும் உடலுக்கும் உள்ள வேறுபாட்டையும், ஆத்மா எப்படி வெவ்வேறு உடல்களுக்கு மாறுகிறது என்பதையும் புரிந்து கொள்வதாகும். (பக்கம் 693)



**படம் பன்னிரெண்டு :** தேவஹூதி தன் மகன் கபிலரிடம் கூறினார்: ''ஓ என் பகவானே, உலக அழிவின்போது நீங்கள் ஆலமரத்தின் இலைமீது, ஒரு சிறிய குழந்தைபோல், உங்கள் பாத கமலத்தின் விரலைச் சப்பிக்கொண்டு படுத்திருக்கிறீர்கள். எனவே என் வயிற்றில் உங்களால் படுத்திருக்க முடியும் என்பதில் ஆச்சரியமில்லை.'' (பக்கம் 808)




படம் ஒன்று: சாணக்ய பண்டிதரின் செயற்பாடுகளை துல்லியமாக முன்கூட்டி கூறுவதே ஸ்ரீமத் பாகவதம். கற்றறிந்த அந்தணரான இவர் மகத தேச மாமன்னன் நந்தனை பதவியிழக்கச் செய்து, மௌரிய சாம்ராஜ்ய ஸ்தாபகரான சந்திரகுப்தரை சிம்மாசனம் ஏற்றியவர். (பக்கம் 7)




படம் இரண்டு: நடப்பு யுகமான கலியுகத்தின் முடிவில் முழுமுதற் கடவுள் கல்கி அவதாரம் எடுத்து மண்ணுலகின் சீர்கெட்ட மன்னர்களை ஒழிப்பார். (பக்கம் 34)



படம் மூன்று: ஹரே கிருஷ்ண இயக்கமானது, கலியுகத்தில் கொந்தளிக்கும் கடலில் தவிக்கின்ற பழுதுபட்ட ஆத்மாக்களை கரையேற்றிவிடும் உயிர்காக்கும் படகு போன்றது. (பக்கம் 80)



படம் நான்கு: பிரபஞ்சம் அழியும் சமயத்தில் பிரபு சங்கர்ஷணரின் வாயிலிருந்து தீப் பிழம்பு வெளியேறி அனைத்தையும் சுட்டெரித்து அழித்துவிடும். பிறகு ஜீவனற்ற பிரபஞ்ச ஓடு சுட்டெரிக்கப்படும். (பக்கம் 85)



படம் ஐந்து: பறவை பாம்பான தக்ஷகன் சீரிப்பாய்ந்து வந்து பரீக்ஷித் மன்னனை தீண்டியது. அதனின் விஷம் கொடிய விஷமாதலால் மன்னனின் உடல் எரிந்து சாம்பலாயிற்று. (பக்கம் 119)



படம் ஆறு: தன் தந்தையின் கோர மரணத்திற்கு காரணமானவர்களை பழிவாங்கும் நோக்கத்தில் ஜனமேஜய மாமன்னன் அந்தணர்களைக் கொண்டு பெரிய யாகம் ஒன்றை நடத்தி, அதில் உலகிலுள்ள அனைத்து பாம்புகளையும் போட்டு பொசுக்கினார். (பக்கம் 121)



படம் எழு: நைமிசாரண்யத்தில் முனிவர்கள் கூட்டத்திற்கு தலைமை வகித்த சௌனகர், ஸ்ரீமத் பாகவதத்தைச் சொன்ன ஸூத கோஸ்வாமியிடம் சொன்னார். ''ஓ, ஸூதரே, நீண்ட ஆயுளைப் பெற்று வாழும்! தவச் சீலரே, மிகச்சிறந்த பேச்சாளரே, தயவுசெய்து தொடர்ந்து எங்களுடன் பேசும். தாங்களே அறியாமையில் அலைந்து திரியும் மாந்தர்களுக்கு நல்வழி காட்டுபவர்.''


பின்னர், முன்பு பிரபஞ்ச அழிவின் போது உயிர்தப்பிய மாபெரும் முனிவரான மார்கண்டேய ரிஷியின் வரலாற்றைக் கூறுமாறு ஸூதரிடம் கேட்டார். ஸூத கோஸ்வாமி பதிலளித்தார், ''ஓ தவச் சீலர் சௌனகரே, தாங்கள் கேட்ட கேள்வி ஒன்றே ஒவ்வொருவருடைய குழப்பத்தையும் நீக்க போதுமானது. ஏனென்றால் இந்தக் கேள்வியே பிரபு ஸ்ரீமந் நாராயணரின் திவ்ய சரித்திரத்தை படிக்கச் செய்யும். கலியுகத்தின் குற்றங்குறைகளை நீக்கக்கூடிய திவ்ய சரித்திரம். (பக்கம் 168-171)




படம் எட்டு: மன்மதன் கட்டவிழத்துவிட்ட சபலங்கள் எதையும் பொருட்படுத்தாது மார்கண்டேய ரிஷி தியானம் கலையாமல் உறுதியாக இருந்தார். தன் அற்புத சக்தியால் மன்மதனையும் அவன் அனுப்பிய பெண்மணிகளையும் எரித்து காமனைத் தோல்வியுறச் செய்தார். (பக்கம் 179)




படம் ஒன்பது: தவச்சீலர் மார்கண்டேய ரிஷிக்கு அருள்புரிய விரும்பிய முழுமுதற்கடவுள் அவர் முன் நரன் மற்றும் நாராயணன் வடிவத்தில் தோன்றினார். (பக்கம் 180)



படம் பத்து: அரும்பாடுபட்டு பிரளயத்தில் தத்தளித்த மார்கண்டேய ரிஷி ஆலமரம் ஒன்றை அடைந்தார். அந்த மரத்தின் இலையில் வசீகரத்துடனும் பிரகாசத்துடனும் கூடிய குழந்தைச் சிறுவன் படுத்திருப்பதைக் கண்டார். (பக்கம் 204)



படம் பதினொன்று: ஒரு சமயம் வானவீதியில் தம் ரிஷப வாகனத்தில் பவனிவந்த சிவபெருமான் மாமுனிவர் மார்கண்டேய ரிஷி மெய்மறந்த தியானத்தில் இருப்பதைக் கண்டார். (பக்கம் 213)



படம் பனிரெண்டு: தம் ஆன்மீக ஆசான் ஸ்ரீல நாரத முனிவர் கூற ஆன்மீக ஞானத்தைக் கேட்டவர் ஸ்ரீல வியாசதேவர். இந்த ஆன்மீக ஞானத்தை தம் தந்தையும் பிரபஞ்சத்தின் முதல் படைப்புமாகிய பிரம்மதேவரிடமிருந்து கேட்டவர் நாரதமுனிவர். பிரம்மதேவர் இந்த ஆன்மீக ஞானஜோதியை முழுமுதற் கடவுளிடமிருந்து நேரடியாகப் பெற்றவர்.

பதிலுக்கு ஸ்ரீல வியாசதேவர் பாகவதம் விடுக்கும் நற்செய்தியை தம் மகன் சுகதேவ கோஸ்வாமிக்குச் சொல்ல, அவர் அதை பரீக்ஷித் மன்னனுக்கு வழங்கினார். சுகதேவ கோஸ்வாமியின் சீடரான ஸூதகோஸ்வாமி அந்த சமயம் அங்கிருந்தார். பிற்பாடு அவர் இதே ஞானதீபத்தை நைமிசாரண்ய முனிவர்களுக்கு வழங்கினார். ஆன்மீக ஞானத்தைப் பெறுகின்ற சரியான




படம் பதின்மூன்று: பிரபு கிருஷ்ணர் மிகமிக வசீகரமானவர். அவருடைய நித்திய தெய்வீகத் தன்மைகளே இதற்குக் காரணம். இவ்வுலகின் அழகே அவருடைய அழகின் ஓர் மங்கலான பிரதிபலிப்பாகும். (பக்கம் 297)



**படம் ஒன்று:** கஜேந்திரன் ஒரு தாமரைப்பூவை தன் தும்பிக்கையில் பற்றி எடுத்து, வேதனையின் காரணத்தால் பெருங் கஷ்டத்துடன், ''பகவான் நாராயணரே, ஜகத்தின் பிரபுவே, தங்களுக்கு எனது பணிவான வணக்கங்கள்'' என்று கூறியது.
*(பக்கம் 117)*



**படம் இரண்டு:** பகவான் முதலையின் தலையை அதன் உடலிலிருந்து துண்டித்த பொழுது, அது ஒரு கந்தர்வரின் அழகிய ரூபத்தை ஏற்றது. கஜேந்திரன் பெற்ற ஆசி இன்னும் பெரிது. ஏனெனில் அது பிறவித் தளையிலிருந்து விடுபட்டு முக்தியடைந்து, பகவானுடையதைப் போன்ற ஒரு ரூபத்தைப் பெற்றது. (பக்கம் 229-236)




**படம் மூன்று:** பகவான் தமது கருணை மிகுந்த பார்வையினால் அசுரர்களையும் தேவர்களையும் மீண்டும் உயிர்ப்பித்தார். பிறகு மந்தர மலையை ஒரு கையினால் தூக்கினார். *(பக்கம் 233)*



படம் நான்கு: எல்லோரும் பெருந் துன்பத்திற்கு ஆளாகியிருப்பதைக் கண்டு அவர்களிடம் இரக்கம் கொண்ட சிவபெருமான், அந்த விஷம் முழுவதையும் தமது கையிலெடுத்து பருகிவிட்டார். (பக்கம் 269-273)




**படம் ஐந்து:** தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது, தன்வந்தரி என்ற ஓர் அற்புத புருஷர் கையில் அமிர்த கலசத்துடன் தோன்றினார். அவர் விஷ்ணுவின் ஓர் அம்சத்தின் அம்சமாவார். *(பக்கம் 304-306)*




**படம் ஆறு:** மோகினி-மூர்த்தி தமது கூர்மையான சக்கரத்தினால் ராகுவின் தலையைத் துண்டித்துவிட்டாள். ஆனால் ராகு அமிர்தத்தைப் பருகத் துவங்கி விட்டதால், அவனது தலை மடியவில்லை. *(பக்கம் 332-333)*




**படம் ஏழு:** அசுரனான காலனேமி யுத்தகளத்தில் பகவான் விஷ்ணுவைக் கண்டதும், தன் திரிசூலத்தைக் கையிலெடுத்து அதை கருடனின் தலையைக் குறிபார்த்து வீசத் தயாரானான். *(பக்கம் 368)*



**படம் எட்டு:** தமது மனைவியுடன் பகவான் மதுசூதனரின் வசிப்பிடத்திற்குச் சென்ற சிவபெருமான், பகவானிடம் அவரது மோகினி ரூபத்தைக் காட்டியருளும்படி வேண்டினார். *(பக்கம் 405)*



**படம் ஒன்பது:** விஸ்வஜித் எனப்படும் யாகத்தின்போது பிரகலாத மகாராஜன் பலி மகாராஜனுக்கு என்றுமே வாடாத ஒரு மலர் மாலையைக் கொடுத்தார். சுக்ராசாரியர் அவருக்கு ஒரு சங்கைக் கொடுத்தார். *(பக்கம் 510)*



படம் பத்து : ஆகாயத்தையே விழுங்கி, எல்லாத் திசைகளையும் எரித்து விடுவது போல் காணப்பட்ட பலியின் பரந்த சேனையைக் கண்டு தேவேந்திரன் ஆச்சரியமடைந்தார். (பக்கம் 488-495)



**படம் பதினொன்று:** *அதிதி பயோவிரத சடங்கை நிறைவேற்றியதும், பரமபுருஷர் அவள் முன் தோன்றி அவளைப் பரவசத்தில் ஆழ்த்தினார். (பக்கம் 557-558)*




**படம் பன்னிரண்டு:** பகவான் தமது தாய் தந்தையரின் முன்னிலையில், ஒரு நாடக நடிகரைப்போல் தமது வாமன ரூபத்தை ஏற்றார். (பக்கம் 588)



**படம் பதின்மூன்று:** பலி மகாராஜனும் சபையோரும் வியப்புடன் பார்த்துக்கொண்டு இருக்கும்பொழுது வாமன ரூபத்தை ஏற்ற எல்லையற்ற பரமபுருஷர், பூமியும், கிரக அமைப்புக்களும், ஆகாயமும், சமுத்திரங்களும், பறவைகளும், விலங்குகளும், மனிதர்களும், தேவர்களும் உட்பட அனைத்தும் தமது உடலுக்குள் அடக்கும்படி தமது உடலின் அளவை பெரிதாக்கிக் கொண்டே போனார். இவ்வாறு சங்கு, வாள், கேடயம், சக்கரம், அம்பு, வில், தாமரைப்பூ மற்றும் கதை ஆகியவற்றை ஏந்தியபடி, பகவான் தமது விஸ்வ-ரூபத்தில் பலி மகாராஜன் முன் எழுந்தருளினார். *(பக்கம் 665-667)*



**படம் பதினான்கு:** *பகவான் வாமனரின் சகாக்கள் எல்லா அசுரர்களையும் வென்ற பிறகு, கருடன் வருண-பாசத்தினால் பலி மகாராஜனைப் பிணைத்து பகவான் முன் அவரைக் கொண்டு வந்தார். (பக்கம் 695)*



**படம் பதினைந்து:** சத்தியவிரத மகாராஜன் முன்பு பகவானால் கொடுக்கப்பட்ட உபதேசங்களைப் பின்பற்றி, வாசுகி என்ற பாம்பைக் கயிறாகப் பாவித்து, தன் படகை அப்பெரிய மீனின் கொம்புடன் பிணைத்தார். (பக்கம் 796)



படம் ஒன்று:பிரியவிரத மன்னன் இப்பிரபஞ்சத்தினை ஆட்சி செய்து கொண்டிருந்த பொழுது, சத்திமிக்க சூரியதேவனின் சுற்றில் ஒருமுறை அதிருப்தியடைந்தார். தமது ரதத்தில் அவர் சுமேரு மலையினைச் சுற்றி வந்தபொழுது சூரியதேவன் தன்னைச் சுற்றியுள்ள கிரஹங்களையெல்லாம் ஒளிமயமாக்கிக் கொண்டிருந்தபொழுது அதன் தென் பகுதி ஒளிமங்கி இருந்தது. வடபகுதி ஒளி குறைந்திருந்தது. பிரியவிரத மன்னனுக்கு இது பிடிக்கவில்லை. அதனால் பிரபஞ்சத்தில் இரவில்கூட பகல் ஒளி இருக்க வேண்டுமென்று அவர் தீர்மானித்தார். அவர் சூரியதேவனின் கோளப்பாதையில் ஓர் ஒளிமிக்க ரதத்தில் சுற்றி வந்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டார். (பக்கம் 58)




படம் இரண்டு:பெரிய அன்ன வாகனத்தினைக் கண்ணுற்றதும் பிரம்ம தேவன் 'வந்துவிட்டார் என்பதை நாரதர் புரிந்து கொண்டார். ஆகையினால் அவரும் சுயம்புவ மனுவும் அவரது மைந்தன் பிரியவிரதனும் உடனே எழுந்து நின்றனர். (பக்கம் 18)



படம் மூன்று:பகவான் அவரது கருட வாகனத்தில் வந்ததைக் கண்ணுற்ற நாபி மன்னரும், அவரது புரோகிதர்களும், சகாக்களும் தங்களைத் திடீரென்று பெரும் செல்வத்தைப் பெற்ற பிச்சைக்காரர்களைப் போல் உணர்ந்தனர். அவர்கள் பகவானை மிகவும் மரியாதையுடன் வரவேற்றனர். (பக்கம் 113)




படம் நான்கு:பகவான் ரிஷபதேவர் அவரது நன்னடத்தையுள்ள மகன் களுக்கு உன்னத விஞ்ஞானத்தை உபதேசித்தார். எதிர்காலத்தில் அவர்கள் இவ்வுலகினை நல்ல முறையில் ஆட்சி செய்ய வேண்டும் எனக்கருதியே அவர் அவ்வாறு கூறலுற்றார். (பக்கம் 161)



படம் ஐந்து: அவதூதர் எனப்படும் மிகச்சிறந்த மகானாக மாறி உலகியற் கவலைகள் எதுவுமின்றி பகவான் ரிஷபதேவர் மக்கள் மத்தியில் குருடரைப் போல், மற்றும் ஊமை மனிதனைப் போல், ஒரு பேய் அல்லது புத்தி நிதானம் இல்லாத மனிதரைப் போல் திரிந்து வந்தார். (பக்கம் 209)




**படம் ஆறு:**பரத மகாராஜன் அந்த மானை வளர்ப்பதில் பற்றுக் கொண்டு, ஆன்மீக முன்னேற்றத்திற்கான யம நிஜங்களை மறந்து, படிப்படியாக பரமபுருஷரை வழிபடுவதையும் மறந்து போனார். (பக்கம் 273)



படம் ஏழு:தனது விக்கிரகம் வெடித்து அதிலிருந்து வெளியே வந்த பத்ரகாளி, பீடத்திலிருந்து தாண்டிக் குதித்து, மானுட பரதனைக் கொள்ள விரும்பிய துஷ்டர்கள் மற்றும் திருடர்களின் தலைகளை உடனே துண்டித்தாள். (பக்கம் 325)



படம் எட்டு:இலாவ்ருத-வர்ஷத்தில் சிவபெருமான் பகவான் சங்கர்ஷணரைத் தியானிக்கும் பொழுது, அவர் மனைவி துர்கை உடனிருக்கப் பத்துக்கோடி பணிப் பெண்களினால் சூழப்பட்டிருக்கிறார். (பக்கம் 604)



**படம் ஒன்பது:** அறியாமையே வடிவமான ஓரசுரன் ஒருசமயம் வேதங்கள் அனைத்தையும் திருடிக் கொண்டு ரஸாதல லோகத்துக்குச் சென்றான். ஆனால் பகவான் ஹயகிரீவர் வேதங்களைக் கைப்பற்ற பிரம்மதேவன் வேண்டிக் கொண்டதினால் அவரிடம் திருப்பி அளித்தார். (பக்கம் 624)




**படம் பத்து :** அரக்கர்களின் தலைவனான இராவணன், மனிதரைத் தவிர வேறு எவராலும் கொல்லப்பட முடியாதவன் என்று ஆணையிடப்பட்டிருந்தது. இதனால் அவனைக் கொல்ல பகவான் ராமச்சந்திரர் ஒரு மனித ரூபத்தில் தோன்றினார். ராமருக்கும் இராவணனுக்கும் இடையிலான யுத்தம் பல நாட்கள் நீடித்தது. பூமியும், கடல்களும், சொர்கங்களும் அவர்களுடைய யுத்தத்தின் வலிமையினால் தொல்லைக்குள்ளாயின. அந்த அசுரனின் தோல்வி நெருங்கிவிட்டதை வானியல் சம்பவங்கள் முன்னறிவித்தன. கடைசியாக பகவான் விட்ட அம்பு இராவணின் இதயத்தை ஓரணுகுண்டு போல் தாக்கியது.

(பக்கம் 692)



படம் பதினொன்று:யமலோகத்தில் ஆயிரக்கணக்கான நரக லோகங்கள் உள்ளன. பாவம் செய்தவர்கள் இந்த லோகங்களில் புகுந்து பாவத்துக்குத் தக்கபடி துன்புற வேண்டும். மது அருந்தும் பிராமணன் அயஹ்பானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு யம தூதர்களால் உருக்கிய இரும்பை குடிக்கச் செய்யப்படுகிறான். பிறர் மனைவியுடன் உடலுறவு கொள்பவன் இறந்த பிறகு பழுக்கக் காய்ச்சிய ஒரு பெண்ணுருவை கட்டித் தழுவ வேண்டும். திருடர்கள் சந்தம்ச நரகத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, பழுக்கக் காய்ச்சிய குறடுகளால் அவர்களுடைய தோல் கிழித்தெடுக்கப்படும். விலங்குகளை உயிரோடு சமைப்பவர்கள், கும்பீபாகம் என்ற நரகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, யமதூதர்களால் கொதிக்கும் எண்ணெயில் சமைக்கப்படுவார்கள். (பக்கம் 908 - 928)



படம் பன்னிரண்டு:பிரபஞ்ச அழிவுக் காலத்தில் ருத்திரன் தோன்று கிறார். பதினோரு ருத்திரர்களின் உருவம் அல்லது சிவபெருமானின் அவதாரமான இந்த ருத்திரர் படைப்பு முழுவதையும் அழிக்கிறார். (பக்கம் 875)





**படம் ஒன்று:** பீமசேனரும், ஜராசந்தனும் மாறிமாறி ஒருவர் மற்றவரின் தோள்களையும், இடுப்புகளையும், காறை எழும்புகளையும் மிகுந்த வேகத்துடனும், வலிமையுடனும் தாக்கியதால் அவர்களது ஆயுதங்களும் உடைந்து விழுந்தன. (பக்கம் 84)



**படம் இரண்டு:** *யுதிஷ்டிர மகாராஜனால் செய்யப்பட்ட அற்புதமான ராஜஸூய யாகத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் முதல் மரியாதையைப் பெற்றார். (பக்கம் 124)*




**படம் மூன்று:** துஷ்டனான சிசுபாலன் ஸ்ரீ கிருஷ்ணருக்கு முதல் மரியாதை செய்யப்பட்டதைக் கண்டு கடுங்கோபமடைந்து பகவானை நிந்தித்தான். முதலில் பகவான் ஏதும் பேசவில்லை. சபையோரில் சிலர் தங்கள் செவிகளைப் பொத்திக் கொண்டு சபையைவிட்டு வெளியேறினர். பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு அவமதித் தவனைக் கொல்ல முற்பட்டனர். ஆனால் பகவான் தமது பக்தர்களைத் தடுத்துவிட்டு, கூர்மையான தமது சக்கராயுதத்தை அனுப்பி தமகோஷனின் துஷ்ட புத்திரனை சிரச்சேதம் செய்தார். *(பக்கம் 131-132)*




**படம் நான்கு:** தம் நண்பரான சுதாமரை பகவான் தமது நாயகியின் கட்டிலில் அமர்த்தி பல்வேறு உபசாரங்களைச் செய்ததுடன் தாமே அவரது பாதங்களையும் கழுவினார். *(பக்கம் 249)*




**படம் ஐந்து:** கிருஷ்ணரும், சுதாமரும் சாந்தீபனி முனிவரின் குருகுலத்தில் பிரம்மச்சாரி மாணவர்களாக இருந்தபோது, ஒருசமயம் விறகு சேகரிக்கச் சென்ற அவர்கள் பயங்கரமான காலந்தவறிய புயற்காற்றில் சிக்கிக் கொண்டனர். (பக்கம் 255)




**படம் ஆறு:** வீரர்களில் முதன்மையான பகவான் பரசுராமர் உலகிலுள்ள எல்லா அரசர்களையும் கொன்று, அவர்களுடைய இரத்தத்தைக் கொண்டு சமந்த-பஞ்சகத்தில் பெரிய ஏரிகளை உண்டாக்கினார். (பக்கம் 291)



**படம் ஏழு:** ஜாம்பவான் பகவானோடு இருபத்தேழு நாட்கள் போர் செய்தபின், உண்மையை உணர்ந்து சியமந்தக மணியையும், தன் மகள் ஜாம்பவதியையும் தன் அன்புக் காணிக்கையாக பகவானுக்குக் கொடுத்தார். (பக்கம் 327)




**படம் எட்டு:** பகவான் நீண்ட பிரிவுக்குப் பிறகு கோபியர்களைக் குருட்சேத்திரத்தில் சந்தித்தபொழுது, தம்மை அவர்கள் எங்கும் காணக்கூடிய வகையில் அவர்களுக்கு ஞான-யோகத்தை உபதேசித்தார். ஆனால் அவரது தூய அன்பில் முழுமையாக மூழ்கியிருந்த கோபியர்கள் இவ்வாறு வேண்டினர், ''பிரிய முள்ள பகவானே, மகா யோகிகளும், தத்துவவாதிகளும் ஜட வாழ்வில் துன்புறுபவர்களுக்கு ஒரே அடைக்கலமான தங்களுடைய தாமரைப் பாதங்களை தியானிக்கின்றனர். ஆனால் நாங்கள் குடும்ப விவகாரங்களில் ஈடுபட்டுள்ள சாதாரண இடைப் பெண்களே என்றாலும், அத்தாமரைப் பாதங்கள் எங்களது இதயங்களிலும் எழுந்தருள வேண்டுகிறோம்.'' *(பக்கம் 315)*




**படம் ஒன்பது:** பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பௌமாசுரனைக் கொன்றபின், அவனது சிறையில் அடைபட்டிருந்த 16,100 இளவரசிகளையும் விடுவித்து அவர்கள் அனைவரையும் மணந்து கொண்டார். *(பக்கம் 343)*



**படம் பத்து :** நீண்ட காலத்திற்கு முன் தான் பறிகொடுத்த குழந்தைகளைப் பார்த்த தேவகி, தாய்ப் பாசத்தினால் பூரிப்படைந்தாள். *(பக்கம் 424)*




**படம் பதினொன்று:** பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தமது அற்புத நகரான துவாரகையில் உள்ள தமது 16,108 ராணிகளுடைய ஒவ்வொரு அரண்மனையிலும் அவர்களோடு இன்புற்று மகிழ்வார். ஒவ்வொரு அரண்மனை நிலத்திலும் பல்வேறு தாமரைகளின் மகரந்தப் பொடியின் நறுமணம் வீசிய, தெளிந்த நீருடைய தாமரைத் தடாகங்கள் உள்ளன. பகவான் தம் மனைவிகளுடன் அத்தடாகங்களில் இறங்கி விளையாடி மகிழ்வார். இசைக் கலைஞர்களும், பாடகர்களும், கவிஞர்களும் அவரைத் துதிபாட, பகவான் தம் நாயகிகளின் மீது நீரைப் பீய்ச்சியடிப்பார். அவர்களும் சிரித்துக் கொண்டே பகவான் மீது நீரைப் பீய்ச்சியடிப்பார்கள். இவ்வாறு பெண் யானைகளின் கூட்டத்தில் ராஜயானை போல் பகவான் இன்புற்று மகிழ்ந்தார். (பக்கம் 638-641)



**படம் பன்னிரண்டு:** பகவான் ஸ்ரீ கிருஷ்ணரையும், அவருடன் வந்த முனிவர்களையும் கண்டு சுருததேவர் மகிழ்ச்சிப் பெருக்கால் தன் சால்வையை அசைத்தபடி கூத்தாடினார். (பக்கம் 450)



**படம் ஒன்று :** துரியோதனனின் கொடிய சொல் அம்புகளால் இதயத்தில் தைக்கப்பட்ட விதுரர், மனம் கலங்காமல் வில்லை வாயிலில் வைத்துவிட்டு, தமையனின் அரண்மனையை விட்டு வெளியேறினார். (பக்கம் 16)



படம் இரண்டு : கிருஷ்ணரும் பலராமரும் ஒரே கையால் கழுதை அரக்கர்களின் பின்னங்கால்களை பற்றிச் சுழற்றியபடி அவர்களைப் பனைமரங்களின் உச்சியில் வீசி எறிந்தனர். (பக்கம் 97)




**படம் மூன்று :** பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகியவற்றை ஏந்திய தமது சதுர்-புஜ ரூபத்தில் முற்றுகையிடப்பட்ட நகரிலிருந்து வெளியேறி, தொடத்தகாதவனான மன்னன் காலயவனை ஏறிட்டும் பார்க்காமல், போர் வீரர்களின் மத்தியில் புகுந்து சென்றார். காலயவனன் தன் தேரை விட்டிறங்கி கிருஷ்ணரைப் பின்தொடர்ந்து ஓடினான். ஆனால் பகவான் அவனது கைக்கெட்டாத தூரத்திலேயே முன் சென்றார். கோபமடைந்த காலயவனன், "கிருஷ்ணா! நீ பெரிய வீரனென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு கோழையைப்போல் நீ யுத்தகளத்தை விட்டு ஓடுகிறாயே!'' என்று கூவினான்.

(பக்கம் 113)



**படம் நான்கு :** நிலவொளியால் பிரகாசப்படுத்தப்பட்ட இலையுதிர் காலத்தின் ஓரிரவில், பகவான் தமது இளம் தோழிகளை இனிய கானங்களால் வசீகரித்து, அவர்களின் மத்தியில் கவர்ச்சிப் பொருளாக விளங்கி ராஸ லீலையை அனுபவித்தார். ஸ்ரீ கிருஷ்ணர் தம்மை விரிவடையச் செய்து, ஒவ்வொரு கோபியின் பக்கத்திலும் நின்று, தமது கைகளால் அவர்களது கழுத்துகளைச் சுற்றி வளைத்தார். தன் பக்கத்தில் மட்டுமே கிருஷ்ணர் நிற்பதாக ஒவ்வொரு கோபியும் எண்ணினாள். தேவர்களும் அவர்களது மனைவியரும் அந்த ராஸ லீலையைக் காண பேராவல் கொண்டு, நூற்றுக்கணக்கான வானுலக விமானங்களில் ஆகாயத்தில் கூடினர். இந்த ராஸ லீலைதான், பகவானுக்கும், ஜீவன்களுக்கும் இடையிலான அன்புப் பரிமாற்றத்தின் மிகஉயர்ந்த நிலையாகும். (பக்கங்கள் 101,399)



**படம் ஐந்து :** தமது குடும்பத்தின் (யது வம்சத்தின்) முடிவை முன்னறிந்து, தமது மண்ணுலக லீலைகளை முடித்துக்கொள்ள விரும்பிய ஸ்ரீ கிருஷ்ணர், சரஸ்வதி நதிக்கரையிலுள்ள தனிமையான ஓரிடத்திற்குச் சென்று ஓர் இளம் ஆலமரத்தடியில் அமர்ந்தார். அங்கு வந்த உத்தவரும், மைத்ரேயரும் அவருடன் சேர்ந்துகொண்டனர். (பக்கங்கள் 135-140)




**படம் ஆறு :** புனித கங்கையின் தோற்றுவாயான ஹரித்துவாரில் விதுரர் மைத்ரேய முனிவரைச் சந்தித்து, ''மாமுனிவரே, ஒருவன் உண்மையான மகிழ்ச்சியை அடைய எப்படி வாழவேண்டும் என்பதை எனக்கு உபதேசிக்க வேண்டுகிறேன்'' என்று வினவினார். (பக்கங்கள் 176-177)




**படம் ஏழு :** ஒரு தாமரை மேலமர்ந்து 30 லட்சம் கோடி கோடி ஆண்டுகளுக்கும் மேலாக தியானித்தபின், பிரம்ம தேவர் தன் இதயத்திலுள்ள பரமபுருஷரைக் காண்பதற்குரிய தூய அறிவை விருத்தி செய்துகொண்டார். (பக்கங்கள் 346-347)



**படம் எட்டு :** பிரம்ம தேவருடைய பகலின் முடிவில், பகவானின் பாம்புப் படுக்கையான சங்கர்ஷணரின் எண்ணற்ற வாய்களிலிருந்து பெரும் அக்னி வெளிப்பட்டு, மூவுலகங்களும் அழிக்கப்படுகின்றன. (பக்கங்கள் 464-465)




**படம் ஒன்பது :** பிரம்ம தேவரின் கோபம் அவரது புருவங்களுக்கு மத்தியிலிருந்து, நீலமும் சிவப்பும் கலந்த ஒரு குழந்தையாக வெளிவந்தது. அக்குழந்தை கோபத்தின் அவதாரமான ருத்திரனாவார் (சிவன்). (பக்கங்கள் 483-488)




**படம் பத்து** : பிரம்ம தேவரின் உடல் மற்றும் மனதிலிருந்து அறியாமைக் குணங்களும், மாமுனிவர்களும், வேதமந்திரங்களும், கலைகளும், விஞ்ஞானங்களும், வேறு பல ஆதாரப் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டன. (பக்கங்கள் 478-517)



**படம் பதினொன்று :** சிறுவர்களைப்போல் காணப்படும் மாமுனிவர்களான நான்கு குமாரர்கள், ஆன்மிக உலகான இறைவனின் இராஜ்யத்தில் பரமபுருஷரை நேருக்கு நேராகக் கண்டனர். பகவான் அவரது சகாக்களினால் சூழப்பட்டிருந்தார். அவர்கள் பகவானை விசிறியாலும், குடையாலும், மற்ற உபகரணங்களாலும் பூஜித்துக் கொண்டிருந்தனர். அம்முனிவர்கள் அருவவாதிகளாக இருந்தவர்கள். ஆனால் பகவானை தரிசித்ததும் அவரது பக்தர்களாக மாறிவிட்டனர். (பக்கங்கள் 667-673)




**படம் பன்னிரெண்டு :** கஸ்யப முனிவர் தியான சமாதியில் இருந்தபொழுது, காம இச்சையால் துன்புறுத்தப்பட்ட அவரது மனைவியான திதி, தன்னுடன் உடலுறவு கொள்ளும்படி அவரிடம் வேண்டினாள். (பக்கம் 577-578)




படம் ஒன்று : அத்ரி முனிவர் பிரம்ம தேவரையும், பகவான் விஷ்ணுவையும், சிவபெருமானையும் கண்டதும், மிகவும் மகிழ்ந்து, மிகவும் சிரமத்துடன் ஒற்றைக்காலால் நடந்து அவர்களிடம் சென்றார். (பக்கம் 21)




படம் இரண்டு : ஸ்ரீ - நர நாராயண ரிஷி தோன்றியபோது, தேவ லோகத்தில் மங்கல வாத்தியங்கள் முழங்கின. கந்தர்வர்களும், கின்னரர்களும் பாட, அழகு மங்கையர் ஆடினர். தேவர்கள் மலர் மாரி பொழிந்தனர். (பக்கம் 38)




படம் மூன்று : ஒருநாள், தன் தந்தையால் பெரும் வேள்வியொன்று நடத்தப்படவிருப்பதைக் கேள்விப்பட்ட சதீ, தனக்கு அழைப்பு வரவில்லை என்றாலும், அந்நிகழ்ச்சியில் பங்கேற்க தனக்கு அனுமதியளிக்கும்படி சிவனிடம் வேண்டினாள். (பக்கம் 89)



படம் நான்கு : சதீ தரையிலமர்ந்து, அஷ்டாங்க யோகத்தில் ஆழ்ந்தாள். பிறகு அவள் அக்னியையும், சிவபெருமானின் திருவடிகளையும் தியானித்து, அந்த அக்கினியால் தன் உடலை எரித்துச் சாம்பலாகும்படி செய்தாள். (பக்கம் 147 - 152)



படம் ஐந்து : சிவ பெருமான் கைலாச மலையில், ஒரு பெரிய ஆலமரத்தடியில் தியானத்தில் அமர்ந்திருப்பதை பிரம்மதேவரும் மற்ற தேவர்களும் கண்டனர். குபேரனையும், நான்கு குமாரர்களையும் போன்ற மேன்மக்களால் சூழப்பட்டிருந்த சிவபெருமான், நித்திய காலத்தைப் போல் அச்சமூட்டுபவராக காணப்பட்டார். (பக்கம் 207)



படம் ஆறு : தட்சன் நெய்யை வார்த்து யஜுர்வேத மந்திரங்களை ஓதிய உடனேயே, பகவான் விஷ்ணு கருட வாகனத்தில் அமர்ந்தவராய் யாக அரங்கில் தோன்றினார். (பக்கம் 248)



படம் ஏழு : துருவன் தன் சகோதரனைப் போல் தன் தந்தையின் மடியில் அமர முயன்றபொழுது அவனது மாற்றாந்தாய் அவனைத் தடுத்துவிட்டாள். இதனால் அவன் கோமடைந்து அடிபட்ட பாம்பு போல் பெருமூச்சு விட்டான். (பக்கம் 317)



படம் எட்டு : நாரத முனிவர் துருவனுக்கு, பக்திபூர்வமான அஷ்டாங்க யோக தியானத்தைப் பற்றி உபதேசித்தபின், உத்தானபாத மகாராஜனைச் சென்று காண்பது நல்லதென்று எண்ணினார். தன் மகனின் பாதுகாப்பைப் பற்றி அரசர் கவலையில் ஆழ்ந்திருப்பதை அறிந்த நாரதர், அவரைத் தேற்ற விரும்பினார். (பக்கம் 372)



படம் ஒன்பது : தன் பெருமானைக் கண்ட துருவன் உன்னத பரவசத்தினால் மனக் கிளர்ச்சி அடைந்தவராய், தண்டம் போல் அவர் முன் விழுந்து பகவத் பிரேமையில் ஆழ்ந்தார். (பக்கம் 396)




படம் பத்து : துருவன் பின்வருமாறு துதி செய்தார். "பகவானே, தங்களுடைய இடையறாத பார்வையினால், புத்திபூர்வமான செயல்களின் எல்லா நிலைகளுக்கும் தாங்கள் பரம சாட்சியாக விளங்குகிறீர்கள். தாங்கள் பலம், செல்வம், புகழ், அழகு, அறிவு, துறவு ஆகிய ஆறு கல்யாண குணங்கள் நிரம்பிய மூல முதற் கடவுளாவீர்." (பக்கம் 416)



படம் பதினொன்று : பகவான், ஆத்மஞானம் பெறாத ஆத்மாக்களின் செயல்களை இறுக்கமாக ஆளும் (சத்வம், ரஜஸ், தமஸ் என்ற) பௌதிக குணங்களுக்கு மேலே நிற்கிறார். மாயையின் வசப்பட்டுள்ள இந்த ஆத்மாக்கள், தங்களை அனுபவிப்பவர்கள் அல்லது அனுபவிக்கப்படுபவர்கள் என்று எண்ணுகின்றனர். ஆனால் உண்மையில், பகவானிடம் சரணடையும் வரை, அவர்கள் இயற்கையின் சேவகர்களாகவே இருக்கவேண்டும். (பக்கம் 416)



படம் பன்னிரண்டு : துருவன் அச்சுறுத்தும் இடி முழக்கத்தையும், மின்னலையும் கடும் மழையையும் பார்த்தார். மேலும் சில சிங்கங்கள், புலிகள், மதம் பிடித்த யானைகள், மற்றும் நெருப்பைக் கக்கும் மிகப்பெரிய பாம்புகள் ஆகியவை தன்னைத் தாக்க வருவதைக் கண்டார். (பக்கம் 486)




படம் பதின்மூன்று : வைகுண்டத்திற்குச் செல்லும் தெய்வீக விமானத்தில் ஏறியபின் துருவ மகாராஜன், "ஆதரவற்ற என் தாயை விட்டுவிட்டு நான் மட்டும் எவ்வாறு வைகுண்டம் செல்வேன்?" என்று எண்ணினார். அவருடைய மனதைப் புரிந்துகொண்ட நந்தரும், சுனந்தரும், அவருடைய தாய் சுனீதி மற்றொரு விமானத்தில் வந்து கொண்டிருப்பதை அவருக்குக் காட்டினர். பிறகு அவ்விமானங்கள் ஆன்மீக உலகை நோக்கிப் புறப்பட்டன. விண்வெளியைக் கடந்து செல்லும்பொழுது, துருவன் சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்களையும், தேவர்கள் தங்கள் விமானங்களில் இருந்து கொண்டு தன் மேல் மலர்மாரி பொழிவதையும் கண்டார். (பக்கம் 574)




படம் பதினான்கு : பிருது மகாராஜன், பரமபுருஷரின் ஓர் அம்சமாகையால் அவர் ஏகாதிபத்தியத்தின் உருவாக விளங்கினார். இவ்வாறாக அவரது பட்டாபிஷேகத்தின்போது, பல்வேறு தேவர்கள் பல அற்புத காணிக்கைகள் அவருக்கு அளித்தனர். (பக்கம் 683)



படம் ஒன்று: ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் முழுமுதற் கடவுளான பிரபு ஸ்ரீ கிருஷ்ணர் இம்மண்ணுலகில் யது வம்சத்தில் தோன்றினார். அவரது அவதார நோக்கம் பக்தர்களை காப்பதும் துஷ்டர்களை வதம் செய்வதுமாகும். இந்த வகையில் குருக்ஷேத்திரத்தில் மாபெரும் போரை மூளச் செய்து அசுரத் தன்மை கொண்ட குருக்களை உத்தம பக்தர்களான பாண்டவர்களைக் கொண்டு அழிக்கச் செய்தார். போர் துவங்கும் சற்றுமுன் கணம், பக்தனும் மித்திரனுமான அர்ஜுனனுக்காக தேரையோட்டி இரண்டு சைனியங்களுக்கு முன் கொண்டு வந்து நிறுத்தினார். இந்தச் சூழ்நிலையில் பகவத் கீதையை உபதேசம் செய்தார். (பகவத் கீதை உண்மையுருவில் அறிமுகம் பக்கங்கள் காண்க)



படம் இரண்டு: யது குல பாலகர்கள் சாம்பனுக்கு கர்பிணி பெண் வேடம் இட்டு முனிவர்கள் முன்னிலையில் ஏளனமாக கொண்டு வந்து நிறுத்தி, ''கற்றறிந்த அந்தண பெருமக்களே, இந்த 'கர்பிணிக்கு' பிள்ளை பிறக்குமா அல்லது பெண் பிறக்குமா சொல்லுங்கள் பார்ப்போம்'' என்று நையாண்டி கலந்த தொனியில் கேட்கிறார்கள். (பக்கம் 1)



படம் மூன்று: யாதவ குல பாலகர்கள் முகம் வெளுத்து களையிழந்து கேடு விளைவிக்கும் உலக்கையை அரசவைக்கு கொண்டு வந்து மன்னன் உக்ரசேனரிடம் கொடுத்தனர். அவர் அதை சன்னமான பொடியாக்கி கடலில் தூவச் செய்தார். (பக்கம் 37)



படம் நான்கு: தன் இல்லத்திற்கு வருகை தந்த நாரதர் முனிவரை பயபக்தியுடன் வரவேற்று, ஆசனமளித்து, பாதம் கழுவி, பூஜித்து பிரபு ஸ்ரீ கிருஷ்ணருக்கு தூய பக்தி சேவை செய்வது எப்படி என்பதை விளக்குமாறு வசுதேவர் வேண்டுகிறார். (பக்கம் 50)




படம் ஐந்து: நவ யோகேந்திரர்கள் முக்தி பெற்ற ஆத்மாக்களாதலால் பிரபஞ்சத்தில் எங்கு வேண்டுமானாலும் தங்கு தடையின்றி பிரயாணம் செய்யக்கூடிய அற்புத சக்தி பெற்றவர்கள். இப்படி பிரயாணம் செய்கையில் மெய்ப்பொருளைப் பற்றிய ஞானத்தை வழங்குபவர்கள். மன்னர் நிமியின் யாகசாலையில் அவர்கள் வந்திறங்கியபோது அனைவரும் மரியாதை நிமித்தம் எழுந்து நின்றனர். (பக்கம் 82)




படம் ஆறு: பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் புரிந்த பத்து அவதாரங்கள் (இடது உச்சி படம் தொடங்கி கீழாக): மீன் வடிவமாகிய மச்சாவதாரம், ஆமை தோற்றமாகிய கூர்மாவதாரம், பன்றி ரூபமாகிய வராகாவதாரம், பாதி மனிதன் பாதி சிங்கம் உடல் தாங்கிய நரசிம்மாவதாரம், குள்ள பிராமணனான வாமனாவதாரம், போர் வீரனான பரசுராமாவதாரம், பிரபு ராமச்சந்திரர், பிரபு கிருஷ்ணர், பிரபு பலராமர், பிரபு புத்தர், பிரபு கல்கி. யுக முடிவில் இந்த அவதாரிகள் அனைவரும் அரக்கர்களை சம்ஹாரம் செய்பவர்கள். (பக்கம் 300-04)



படம் ஏழு: சர்வசக்தி படைத்தவரான பிரபு நாராயண ரிஷி தமக்கு ஊழியம் செய்யும் பகட்டாடை ஆபரணங்கள் அணிந்த பல அழகு மங்கையரை திடீரென மன்மதன் முன் தோன்றச் செய்தார். (பக்கம் 295)




படம் எட்டு: புலால் உண்பவர்களுக்கு வேத இலக்கியம் இந்த துல்லியமான எச்சரிக்கையை விடுக்கிறது: வாயில்லாப் பிராணிகளை கொன்று உண்பவர்கள் அடுத்த பிறவியில் அதே நிலைக்கு ஆளாவார்கள். (பக்கம் 334)



படம் ஒன்பது: சைதன்ய மகாபிரபுவை வணங்குபவர்கள் சில சமயம் அவரை அவரது ஆறுகரம் (ஷட்-புஜ) கொண்ட ரூபத்தில் வணங்குகிறார்கள். இருகரங்கள் துறவியின் தண்டம், கமண்டலம் ஏந்த இரு கரங்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் புல்லாங்குழலை வாசிக்க மேலும் இரு கரங்கள் ராமச்சந்திர மூர்த்தியின் கோதண்டம் மற்றும் அம்பு தாங்கிய கோலம். (பக்கம் 366)




படம் பத்து: கலியுகத்தில் சைதன்ய மகாபிரபுவாக (மையம்) ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றி தம் புனித நாமத்தை கூட்டாக உச்சாடனம் செய்யும் பகவத் சேவையை கற்றுத் தருகிறார். மகாபிரபுவின் வலது கை பக்கம் அவரது முதல் விரிவாக்கமான நித்தியானந்த பிரபு. நித்தியானந்த பிரபுவின் வலது கை பக்கம் மகாபிரபுவின் மற்றொரு அவதாரமான ஸ்ரீ அத்வைத ஆசார்யர். மகாபிரபுவின் இடது கை பக்கம் அவரது அகச் சக்தியான ஸ்ரீ கதாதரர், பரிபக்குவ பக்தனான ஸ்ரீ வாசர். இந்த ஐவரும் மெய்ப்பொருளை உணர்த்தும் பஞ்ச தத்துவமாவர். (பக்கம் 353)



படம் பதினொன்று: வேத இலக்கியங்கள் 84 லட்சம் உயிரினங்கள் கடல்வா
ஜந்துக்களாக, தாவரங்களாக, பூச்சிகளாக, பறவைகளாக, பிராணிகளா
மற்றும் மனித இனங்களாக வாழ்வதாக தெரிவிக்கின்றன. ஆன்மீ
உலகத்தில் பரமபுருஷரின் அன்புச் சேவகனாக தொண்டாற்றி நிலைகுலை

டுண்ட ஆத்மா மேற்படி உடல்களில் பிரவேசிக்கிறது. மானுடனாக
த்மாவின் அசல் தன்மை தெள்ளத்தெளிவாக இங்கு சித்தரிக்கப்
டுள்ளது. மானிட உடலை எடுத்ததன் நோக்கம் தேவலோகத்திற்கு
ரும்பிச் செல்வதற்காகும். இந்த வாய்ப்பை நழுவவிட்ட சிதறிய ஆத்மா
லும் மேலும் கீழினத்திற்குச் சரிகிறான். (பக்கம் 639)



படம் பன்னிரெண்டு: யது குல வம்சம் அழியப்போவதை கண்ணுற்ற உத்தவர் பல அபசகுனங்கள் தென்பட பகவான் கிருஷ்ணரை தனிமையில் அணுகி, அவர் முன் தலைவணங்கி, கரம் கூப்பி, ''பிரபோ, அடியேனையும் தங்களுடன் ஆன்மீக உலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று பிரார்த்திக்கிறார். (பக்கம் 441)